பக்கங்கள்:11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 07 சனிக்கிழமை 23.08.2025 கதிர் 287

## இது ரகசியம் அல்ல!

ரணில் நேற்றுக் கைது செய்யப்படுவார் என்பது அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குச் செல்வதற்கு முன்பே சர்ச்சையான விடயம்தான். ☞ 2

## உள்ளகப் பொறிமுறை மூலமே பொறுப்புக்கூறல் விசாரணையில் வெளித்தலையீடு தேவையில்லை

### அயலுறவுத்துறை அமைச்சர் திட்டவட்டம்

பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை உள்ளகப் பொறிமுறையிலேயே பலப்படுத்துவோம். விசாரணைகளில் வெளிநாட்டு தலையீடுகள் அவசியமில்லை. என்று அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த செப்டம்பர் மாதத்தில் நாட்டை பெறுப்பேற்றோம். வங்குரோத்து அடைந்து பொருளாதாரம் ரீதியில் வீழ்ந்திருந்தஇ கடனைமீளச்செலுத்த முடியாத நாட்டையே ☞ 3

## தீர்வு நடவடிக்கையை அறிவியுங்கள் பேச்சுக்கு தமிழ் அரசுக் கட்சி தயார்

### நாடாளுமன்றத்தில் சிறீதரன் எம்.பி. அறிவிப்பு

ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தை நிறைவு செய்யவுள்ள நிலையில் 80 ஆண்டுகள் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு ஏன் தீர்வு காண எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்ற கேள்வி எழுகிறது. அரசுத்தலைவர் அநுரகுமார திசாநாயக்க நாடாளுமன்றத்தில் 7 தடவைகள் விசேட உரையாற்றியுள்ளார். இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் மூலோபாயம் மற்றும் அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அரசுத் தலைவர் வெளிப்படையாக குறிப்பிடவில்லை. ☞ 6

# விலங்கிடப்பட்டார் ரணில் விளக்கமறியலில் அடைப்பு

## இலங்கை வரலாற்றிலேயே முதல் தடவையாக முன்னாள் அரசுத் தலைவர் ஒருவர் சிறையில்



நேற்று முற்பகலில் கைது செய்யப்பட்ட இலங்கையின் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நீதிமன்றத்தில் நடந்த நீண்ட நேர விவாதத்தின் பின்னர் நேற்றிரவு விளக்க மறியலுக்குஅனுப்பப்பட்டார். அவரை ஓகஸ்ட் 26 வரை நான்கு நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்க கொழும்பு தலைமை நீதிவான் நிலுப்புலி ☞ 2

## தபால் தொழிற்சங்கங்கள் நேற்று முதல் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் குதிப்பு

ஆளும்தரப்பின் அறிவிப்பையடுத்து தபால் தொழிற்சங்கங்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் சத்தியாக்கிரக போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

கைவிரல் ரேகைப் பதிவு மற்றும் மேலதிக வேலை நேர கொடுப்பனவு தொடர்பில் எடுத்துள்ள கொள்கை ரீதியான தீர்மானத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். இதையடுத்தே தொழிற்சங்கத்தினர் தமது பணி நிறுத்தப் போராட்டத்தை சத்தியாக்கிரகத்திற்கும் விரிவுபடுத்தியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் 6 நாட்களாகப் பணிநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தபால் தொழிற்சங்கங்கள் அமைச்சரின் அறிவிப்பையடுத்து நேற்று முதல் சத்தியாக்கிரகத்தில் குதித்துள்ளன. மத்திய தபால் பரிமாற்ற சேவை உத்தியோகத்தர்களே இவ்வாறு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்று காலை முதல் கொழும்பிலுள்ள மத்திய தபால் பரிமாற்ற தலைமை அலுவலக வளாகத்தில் இந்தச் சத்தியாக்கிரகம் தொடங்கப்பட்டது.

தமது போராட்டம் கருத்து வெளியிட்ட ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க ☞ 2

## யார் தவறு செய்தாலும் அவர்களை சட்டத்தின்முன் நிறுத்த தயங்கோம்

### பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

வீழ்ச்சியடைந்திருந்த சட்டத்தின் ஆட்சியை தற்போது நாங்கள் உறுதிப்படுத்தி வருகிறோம். மக்களுக்கு இல்லாமல் போயிருந்த நீதியை, நியாயத்தை இந்த சமூகத்துக்கு வழங்கி வருகிறோம். யார் தவறு செய்தாலும் அவர்களை சட்டத்துக்கு முன் கொண்டுவர இந்த ஆளும்தரப்பு பின்வாகப்போவதில்லை. அதனை நாங்கள் செய்து காட்டி இருக்கிறோம் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைப் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் அரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று சபையில் முன்வைத்த ☞ 3

## உயர் குருதி அழுத்தம், நீரிழிவு காரணமாக ரணில் சிறை வைத்தியசாலையில் சேர்ப்பு

### வந்திறங்கிய உடனேயே சம்பவம்

நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டதை அடுத்து வெலிக்கடைச் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட முன்னாள் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாகவே சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சிறைக்கு அவர் சென்று சேர்ந்ததும் மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என சிறைச் சாலைகள் செய்தித் தொடர்பாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

உயர் குருதி அழுத்தம் மற்றும் குருதியில் குளுக்கோஸின் அளவு அதிகரிப்பு (நீரிழிவு) ஆகியன காரணமாக வைத்திய ஆலோசனையின் பேரில் அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக நேற்று விளக்கமறியலில் ☞ 6

## ரணிலைக் கைது செய்யதமை முன்கூட்டியே திட்டமிட்ட செயல்

### மு.கா. தலைவர் ஹக்கீம் கண்டனம்

முன்னாள் அரசுத்தலைவர் ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்ட சம்பவம் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட செயலாகும். அதனாலே யூடியுப் அலைவரிசையாளர் ரணில் விக்ரமசிங்க கைதுசெய்யப்படுவார் என ஏற்கனவே அறிவித்திருந்தார் என சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ☞ 2

## ரணிலின் கைது எதிர்வுகூறல் நிச்சயம் தற்செயலானதல்ல

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

முன்னாள் அரசுத்தலைவர் ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்படுவார் என்று யூடியூப் சமூக வலைத்தளக் கணக்கை கொண்ட ஒருவர் எவ்வாறு முன்கூட்டியே உறுதியாகக் கூறினார்? அவரது இந்த கணிப்பு நிச்சயம் தற்செயலான ஒரு கணிப்பாக இருக்க முடியாது என எதிர்க்கட்சி ☞ 6

## சமஷ்டி தொடர்பில் கலந்துரையாடல் என்பதை ஆளும்தரப்பு சிங்கள மக்களிடம் கூறவேண்டும்

### அதுவரை தீர்வு விடயத்தில் நம்பிக்கை வைக்க முடியாது என்கிறார் கஜேந்திரகுமார்

ஆளும்தரப்பு சமஷ்டியை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சமஷ்டி என்பது பிரிவினைவாதம் அல்ல. அது தொடர்பில் கலந்துரையாடல் என்ற உண்மையை சிங்கள மக்களிடம் கூறும் வரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்த ஆளும்தரப்பின் மீது நம்பிக்கை வைக்க முடியாது. ஆளும்தரப்பு வித்தியாசமானது என்ற அடிப்படை நம்பிக்கையாவது வளர்க்க தொடங்குங்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை தமிழ் அரசு கட்சியானது 1949ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட நாளில் இருந்து சமஷ்டி என்ற ☞ 6

## இனி இது .....

யூரியூப்பர்ஒருவர்ரணில்கைதுசெய்யப்படுவார் என்று அடித்துச் சத்தியம் செய்திருந்தார். அவர் என்பிபி ஆளும்தரப்பினருக்கு நெருக்கமானவராக அறியப்படுகிறார். அதனால் ஆளும்தரப்பிலிருந்து கிடைத்த தகவலின்படிதான் அவர் அந்தத் தகவலை அவ்வளவு உறுதியாகச் சொல்கிறார், அப்படி எப்படி நடந்துகொள்ள முடியும் என்ற சர்ச்சை ஒருபுறம் இருக்க, ரணில் கைது செய்யப்படக்கூடும் என்பதும் ஓரளவிற்கு எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால், அவருக்கு உடனடியாகவே பிணை வழங்கப்படும் என்பதும் பரவலான எதிர்பார்ப்பாக இருந்தது.

சிரித்தபடி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உற்சாகமாக வந்திறங்கிய ரணிலேகூட தான் கைவிலங்கிடப்பட்டு சிறைச்சாலைவாகனத்தில்விளக்கமறியலுக்கு அனுப்பப்படுவார் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார் என்பதை சிறை வாகனத்தில் உற்சாமிழந்து வாடிப்போயிருந்த அவரது முகமே காட்டிக்கொடுத்தது.

அவர்மீதானகுற்றச்சாட்டுகள்தண்டனைச் சட்டப்பிரிவுகள்386மற்றும்388ஆகியவற்றின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. நீதிவான் ஒருவரால் இலகுவில் பிணை வழங்க முடியாத இந்தச் சட்டப் பிரிவுகளின் கீழ் ரணிலுக்குப்பிணைவழங்கப்படுவதைகுற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் கடுமையாக எதிர்த்தனர். ரணில் அரசுப் பணத்தை தனது சொந்தத் தேவைக்காக வீணடித்தார் என்று அரச சட்டவாதிகள் உறுதியாக வாதிட்டனர். அதற்கானஆவணங்களையும்சமர்ப்பித்தனர். பதிலுக்கு ரணிலின் சட்டவாதிகள் அதை எதிர்த்தனர். அவரது பயணம் அரசுமுறைப் பயணமே என்று அவர்கள் வாதிட்டனர்.

இந்தவாதங்கள்நீண்டுஇழுபறிப்பட்டதனால் பிற்பகலில் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட ரணில் பிணையில் விடுவிக்கப்படுவாரா இல்லையா என்பது மாலை வரையில் நிச்சயமற்றதாக இருந்தது. இதனால்பதற்றம்தொற்றிக்கொண்டது. ரணில் விளக்கமறியலுக்கு அனுப்பப்படக்கூடும் என்கிற நிலமை மெல்ல மெல்ல வெளியே பரவத் தொடங்கியதும் இந்தப் பதற்றம் மேலும்அதிகரித்தது. பதற்றத்தை அதிகரிக்கும் விதத்தில் நீதிமன்ற வளாகத்தில் மின்சாரத் தடை ஏற்பட்டு வழக்கு விசாரணை மேலும் காலதாமதமானது. இரவு வரையும் இந்த இழுபறி நீடித்தது.

அரசுத்தலைவராக ரணில் விக்கிரமசிங்க பதவி வகித்தபோது அவரது மனைவியான பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்கவிற்கு 2023 செப்டம்பரில், லண்டனைச் சேர்ந்த வோல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கியது. இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ரணில் தனது பாதுகாவலர்கள் சகிதம் அமெரிக்காவிலிருந்து லண்டனுக்குப் பயணமானார். இது அவரது தனிப்பட்ட பயணம் என்றும் இதற்கு அரச நிதி 16.9 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்றும் இது அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றம் என்றும் குற்றப் புலனாய்வுத்திணைக்களம்குற்றஞ்சாட்டுகிறது.

இந்தக் குற்றச்சாட்டின் கீழ் ரணில் கைது செய்யப்பட்டதும் வோல்வர் ஹாம்டன் பல்கலைக்கழகத்தால்ரணிலுக்குஅனுப்பப்பட்ட அழைப்பிதழின்பிரதியைஐக்கியதேசியக்கட்சி வெளியிட்டது. அந்த அழைப்பிதழ் இலங்கைத் தூதரகம் ஊடாக உத்தியோகபூர்வமாக அரசுத் தலைவர் செயலகத்திற்கு அனுப்பப்பட்டு அதனடிப்படையிலேயே அவர் லண்டனுக்குப் பயணமானார் என்று நிரூபிக்க முயன்றது.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர்ஜான்ராஃப்டெரிகையொப்பமிட்ட இந்தஅழைப்பிதழ், அரசதலைவர்விக்ரமசிங்க மற்றும் முதல் பெண்மணிக்கு பெயரிடப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது, மேலும் செப்டம்பர் 22, 2023 அன்று வோல்வர்ஹாம்டனில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த பட்டமளிப்பு மதிய உணவு மற்றும் விழாவில் அவர்கள்பங்கேற்கவேண்டும்என்பதும்அந்த அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருந்தது. ரணில் தரப்பினர் இந்த அழைப்பிதழைநீதிமன்றத்தில் சமர்ப்பித்து இது பல்கலைக்கழத்தால் லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து அயலுறவுத்துறை அமைச்சுக்குஅனுப்பப்பட்டு, அமைச்சிலிருந்து அரசுத்தலைவர்செயலகத்திற்குஅனுப்பப்பட்ட ஒருஅழைப்பிதழ்என்பதால்இதனைபிரிட்டிஷ் அரசின் உத்தியோகபூர்வ அழைப்பாகவே எடுத்துக்கொள்ளவேண்டும்என்றுவாதிட்டனர்.

ஆனால் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் அதனை மறுத்தார்.

சில ஆவணங்கள் ஆரம்பத்தில் விக்கிரமசிங்கேவின் 2023 லண்டன் பயணத்தை 'தனிப்பட்ட பயணம்' என்று விவரித்திருந்தன என்றும், ஆனால் பின்னர் அது ஒரு 'வருகை' என்று வெறுமனே கூறும் வகையில் மாற்றப்பட்டன என்றும் பீரிஸ் கூறினார். இந்தப் பயணத்திற்காக பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட 10 பேருக்கு ரூ. 16.6 மில்லியன் அரசு நிதி செலவிடப்பட்டதாக அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

வால்வர்ஹாம்டன் பல்கலைக்கழகம் என்றதனியார்நிறுவனத்திடமிருந்துஅழைப்பு வந்துள்ளதாகவும், இந்தப் பயணம் அரசு நிகழ்வாகஅங்கீகரிக்கப்படவேண்டுமென்றால், இங்கிலாந்து அரசிடமிருந்தே அதிகாரப்பூர்வ அழைப்பு இருந்திருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் வாதிட்டார்.

இந்தச் சட்ட வாதங்கள் தமக்குச் சார்பான திசையில் செல்லவில்லை என்பதைப் புருந்துகொண்ட பின்னர் ரணில் விக்ரமசிங்கே சார்பில் வாதாடிய சட்டவாதி அனுஜ பிரேமரத்ன ரணிலின் உடல்நிலை மற்றும் குடும்ப நிலைகளையும் நீதிவான் கவனத்தில் எடுத்து உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ரணில் ஏற்கனவே இதுபோன்ற குற்றச்சாட்டுக்களிலிருந்துஉச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகளால் விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிரான இந்த விசாரணை ஜனாதிபதி செயலகத்தால் நடத்தப்பட்ட உள்ளக விசாரணையை அடிப்படையாகக் கொண்டது, ஆனால் தேசிய தணிக்கை அலுவலகத்தின் அறிக்கை அத்தகைய மோசடி எதுவும் இடம்பெற்றதாகக் காட்டவில்லை. தற்போதையஅரசுத்தலைவரின்செயலாளரின் முறைப்பாட்டின் பேரில் மட்டுமே இந்த விசாரணை தொடங்கப்பட்டது.

ஒரு அரசுத் தலைவருக்கு இதுவரையில் இருந்து வந்த குற்றச்சாட்டுக்களில் இருந்து விலக்களிக்கப்படும் எதிர்ப்பு சக்தி நீக்கப்பட்டதால் மட்டுமே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இல்லையெனில், அத்தகைய வழக்குகளைத் தாக்கல் செய்ய முடியாது. இந்த வழக்கு ரணிலின் புகழுக்கும் அரசியலுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ரணிலுக்குவிடுக்கப்பட்டபல்கலைக்கழகத்தின் அழைப்பின் அடிப்படையை முறையாக ஆராயாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தவருகைக்கானஅழைப்பு இங்கிலாந்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் வழியாகவும், வெளியுறவு அமைச்சகம் வழியாகவும், பின்னர் ஜனாதிபதி செயலகத்திற்கும் அதிகாரப்பூர்வமாக வந்தது. எனவே, இது முற்றிலும் ஐக்கிய இராச்சியத்திற்கான அதிகாரப்பூர்வ பயணம் - என்று வாதாடினார்.

நேற்று யூரியூப்பில், சந்தேகநபரான முன்னாள் அரசுத் தலைவர் பதினான்கு நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்படுவார் என்று கூறப்பட்டது. அவர்கள் அப்படி எப்படிச் சொல்ல முடியும்?.

சந்தேகநபருக்கு 76 வயது, ஏழு ஆண்டுகளாக இதய நோய், நீரிழிவு மற்றும் உயர்குருதிஅழுத்தம்ஆகியவற்றால்பாதிக்கப் பட்டுள்ளார். அவரது மனைவி ஒரு புற்றுநோய் நோயாளி. அவர்களுக்கு குழந்தைகள் இல்லை. அவர்கள் ஒருவரையொருவர் மட்டுமே சார்ந்து இருக்கிறார்கள்.

ஓகஸ்ட் 24 ஆம் தேதி இந்தியாவில் நடைபெறும் காமன்வெல்த் இளைஞர் கவுன்சிலில் அவர் தலைமை விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார். முன்னாள் ஜனாதிபதிக்கு சிறைச்சாலை பாதுகாப்பான இடம் அல்ல. எனவே, எனது கட்சிக்காரரை பொருத்தமான ஜாமீன் நிபந்தனைகளின் அடிப்படையில்விடுவிக்குமாறுமரியாதையுடன் கேட்டுக்கொள்கிறேன் - என்று வாதிட்டார்.

ஆனாலும் நீதிவான் அந்த வாதங்களை எல்லாம்புறந்தள்ளிரணிலின்உடல்நிலையை கவனத்தில் கொண்டு அவருக்கு உரிய கவனிப்புக்களைவழங்குமாறுஅதிகாரிகளுக்கு அறிவுறுத்தி அவரை விளக்கமறியலுக்கு அனுப்பி வைத்துவிட்டார். நான்கு நாள்கள் ரணில் சிறையில் இருப்பது கட்டாயமாகி விட்டது.

சிறைக்குச்சென்றதும்அரசியல்வாதிகளுக்கு நோய்வந்துஅவர்கள்சிறைவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுவிடுவார்கள் என்கிற பொது நடைமுறைக்கு அமைவாக ரணிலும் நேற்று சிறைக்குச் சென்ற உடனேயே அங்குள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுவிட்டார். ஓகஸ்ட் 26 அவரது பிணை மனு மீண்டும் விசாரிக்கப்படும் வரையில் அவர் எப்படியும் சிறை வைத்தியசாலையிலேயே இருப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

இதெல்லாவற்றுக்கும்மேலாகரணில்மீதான தற்போதைய குற்றச்சாட்டு அரச நிதியைத் துஸ்பிரயோகம் செய்தார் என்பதுதான். அதுவும் 16.6 மில்லியன் ரூபாய்கள். ஆனால் வடக்கு கிழக்கில் உள்ள அரச அதிகாரிகள் பலரும் இதைவிடக் கூடிய தொகையை இலஞ்சம் ஊழலாகப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் அவர்களை இந்த ஆளும்தரப்பு எப்போது கைது செய்யும்? அதற்கு ஏதேனும் திட்டம் இருக்கிறதா? அல்லது அரசியல்வாதிகளை மட்டும் கைதுசெய்து தனது அரசியல் புகழை மட்டும் கவனித்துக்கொள்ளுமா?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## விலங்கிடப்பட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லங்காபுர உத்தரவிட்டார்.

இதனையடுத்து கைவிலங் கிடப்பட்ட ரணில் விக்கிரமசிங்க சிறைச்சாலை பேருந்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நிலை மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள அவரது மனைவி மைத்திரியைக் கவனித்துக்கொள்ள இருக்கும் ஒரே நபர் இவரேபோன்றவாதங்களைச்சட்டத்தரணிகள் முன்வைத்தபோதும், அவருக்குத்தேவையான மருத்துவ வசதிகளை சிறைச்சாலைக்குள் வழங்குமாறு உத்தரவிட்ட நீதிவான் அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இலங்கையின் வரலாற்றில் முன்னாள் அரசுத்தலைவர் ஒருவர் இவ்வாறு சிறையில் வைக்கப்படுவது இதுவே முதற்றடவை.

வெளிநாட்டுப் பயணத்தின் போது அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று மதியம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்.

ரணில் மீது சட்டப் பிரிவுகள் 386 மற்றும் 388 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது, இது குற்றவியல் நம்பிக்கை மீறல் மற்றும் பொது சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துதல் ஆகிய பிணையில் வெளிவர முடியாத குற்றங்களைக் குறிக்கும் சட்டப் பிரிவுகள்.

இந்தக்குற்றச்சாட்டுதொடர்பாகவிசாரணை நடத்துவதற்காக அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டபோது கைது செய்யப்பட்டார்.

பின்னர்அவர்பிற்பகல்3.00மணியளவில் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க தனது பதவிக் காலத்தில், 2023 செப்டம்பர் 22 மற்றும் 23 ஆகிய திகதிகளில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவின் நியூயோர்க்கிற்குச் சென்றிருந்தார்.

இப்பயணத்தை முடித்துக்கொண்டு நாட்டிற்குத் திரும்புவதற்கு முன்பு, முன்னாள் அரசுத் தலைவர் தனது மனைவி மைத்ரி விக்ரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள லண்டன் சென்றிருந்தார்.

இங்கிலாந்தின் வோல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஜான் ராஃப்டர், லண்டனில் உள்ள இலங்கை உயர் ஆணையரகம் மூலம் முன்னாள் அரசுத் தலைவர் மற்றும் அவரது மனைவிக்கு அதிகாரப்பூர்வமாக அழைப்பிதழ் வழங்கியிருந்தார்.

இருப்பினும், முன்னாள் அரசுத் தலைவர் சம்பந்தப்பட்ட சுற்றுப்பயணத்தின்போது அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறி ஒரு நபர் சமீபத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு அளித்ததாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

அதன்படி, விசாரணை தொடங்கப்பட்டு, முன்னாள் அரசுத் தலைவர்யின் செயலாளர் சமன் ஏகநாயக்க மற்றும் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட உதவியாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோரிடமிருந்து திணைக்களம் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தது.

அதைத் தொடர்ந்து, விக்ரமசிங்கவை நேற்றுகுற்றப்புலனாய்வுத்திணைக்களத்திற்கு வருமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, அவர் இன்று காலை 9.00 மணியளவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வந்திருந்தார்.

சுமார் 4 மணி நேரம் அவரிடம் வாக்கு மூலங்களைப்பதிவுசெய்தபின்னர், முன்னாள் அரசுத் தலைவர் பிற்பகல் 1.15 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் இன்று பிற்பகல் 3.00 மணியளவில் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

முறைப்பாட்டாளர் தரப்பு சார்பாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் விளக்கமளித்தார். வி.எஸ். கருணாரத்ன என்ற நபர் 17.03.2025 அன்று அரசுத் தலைவரிடம் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து அரசுத் தலைவர் செயலகத்தில் உள்ளக விசாரணை நடத்தப்பட்டதாகவும், பின்னர் 23.05.2025 அன்று அரசுத் தலைவரின் செயலாளரால் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு அளிக்கப்பட்டதாகவும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க, அரசுத் தலைவராக இருந்த காலத்தில், 13.09.2023 முதல் 20.09.2023 வரைகியூபாமற்றும்அமெரிக்காவிற்குஉத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட பின்னர், 22 மற்றும் 23.09.2023 ஆகிய தின்ங்களில் உத்தியோகபூர்வபயணம்ஒன்றைமேற்கொள்வதாகக் கூறி தனிப்பட்ட பயணத்தில் ஈடுபட்டதன் மூலம் அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தினார் என குற்றஞ்சுமத்தப் பட்டுள்ளது.

அதன்படி, தொடர்புடைய சம்பவம் தொடர்பாக 33 சாட்சிகளிடம் வாக்குமூலங்களைப்பதிவுசெய்த பின்னர், நாட்டின் 8ஆவது நிறைவேற்று அரசுத் தலைவரானன ரணில் விக்ரமசிங்கவை சந்தேக நபராகப் பெயரிட்டு கைது செய்ததாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் நீதிமன்றில் தெரிவித்தார்.

நீண்டவிசாரணைகளின்போது அரசாங்க தரப்பு மேலதிக சொலிசிட்டர் ஜெனரலின் கடுமையான எதிர்ப்புக் காரணமாக ரணிலுக்கான பிணைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, 26 ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ரணிலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைப் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் அரசு கட்சி எம்.பி சிவஞானம் சிறீதரன் நேற்று சபையில் முன்வைத்த சபை ஒத்தி வைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க இலஞ்ச ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால் அவர் இன்று (நேற்று) கைது செய்யப்படுவது யூடியூப் அலைவரிசையாளர் ஒருவர் அறிந்துள்ளார்.அவருக்கு இது எப்படி தெரியும். அதிகாரத்தில்இருப்பவர்கள்தான்அவருக்குசிலதுப்புகளை கொடுத்திருக்கலாம். இதுதானா ஆளும் தரப்பின் புதிய கலாசாரம் என கேட்கிறோம்.

சட்டத்துக்கு முன் அனைவரும் சமம். அதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் ரணில் விக்ரமசிங்கவோ இந்த நாட்டின் தலைவராகஇருந்தவேறுயாராகஇருந்தாலும், அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு இருந்தால் அதுதொடர்பில் பீ. அறிக்கை நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்து, அவரைநீதிமன்றஅழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தால், அவரது சட்டத்தரணிகள் அதுதொடர்பில்செயற்பட்டுபிணையில்எடுக்க நடவடிக்கை எடுத்திருப்பார்கள். இதுதான் சாதாரண நடைமுறை.

இதனைவிடுத்து, நாட்டின் முன்னாள் தலைவர் ஒருவரை வாக்குமூலம் பெற்றுக் கொள்ள அழைத்து, பின்னர் கைது செய்வது முறையான நடவடிக்கையல்ல. அவருக்கு எதிராக பீ. அறிக்கை தாக்கல் செய்திருக்கலாம். நாட்டின் முன்னாள் தலைவர் என்றவகையில் ஒரு அடிப்படை நாகரிகம் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். அவருக்குஎதிராககுற்றச்சாட்டுக்கள் இருந்தால், அதுதொடர்பில் நீதிமன்றில் விசாரணைகள் நடத்தப்பட்டு, பின்னர் அவரை கைதுசெய்வது தொடர்பில் நீதிவான் தீர்மானித்திருக்கும்.

அவ்வாறுஎந்தநடைமுறையையும்பின்பற்றாமல் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள அழைத்து, அங்கு கைது செய்யப்படுகிறார். அதுவும் அவர் இவ்வாறு கைது செய்யப்படுவதை யூடியும் அலைவரிசையாளர் ஒருவர் முன்னதாகவே தெரிவித்திருக்கிறார் என்றால், ரணில்விக்ரமசிங்கவின்கைது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்றாகும் என்றார்.

## உள்ளகப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பேற்றோம். இதனால் புதிய ஆளும்தரப்பிற்கு இந்த பொருளாதார பாதாளத்தில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது தொடர்பிலேயே அதிகளவான அவதானத்தை ஆளும்தரப்பு செலுத்த வேண்டியிருந்தது. இதன்படி நாங்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்புபட்டு வறுமை ஒழிக்கும் முயற்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்து கடன் மறுசீரமைப்பு செய்யவும் நடவடிக்கை எடுத்தோம். 90 வீதம் இருதரப்பு கடன் மறுசீரமைப்பை செய்துள்ளோம்.

இதேவேளை நாட்டை பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதற்கு நாட்டின் இன ஒற்றுமை முக்கியமானது. சகல இனத்தவர்களும் இந்த நாட்டின் மக்களே. நாங்கள் ஒரு தாய் பிள்ளைகளே. எங்களிடம் இனபேதம், மத பேதம் எதுவும் இல்லை. நாங்கள் அனைவரும் ஐக்கியப்பட வேண்டும். இதனால் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தே ஆளும்தரப்பு செயற்படுகின்றது. சகல இலங்கையர்களும் அரசுத் தலைவர்யுடனும் அரசாங்கத்துடனும் கைகோர்த்து பயணிக்கவே விரும்புகின்றனர். இதனாலேயே வடக்கு, கிழக்கு மலையகம் என சகல பிரதேசங்களிலும் விசேட மக்கள் ஆணை வழங்கப்பட்டது. இதனை புரிந்துகொண்டு நாங்கள் செயற்பட வேண்டும். வரலாற்றில் நாம் பெற்ற அனுபவங்கள் உள்ளன. அந்த அனுபவங்கள் ஊடாக பாடம் கற்றுக்கொண்ட பாடங்கள் உள்ளன. அவற்றை புரிந்துகொண்டு அந்த அனுபவங்களுடன் பயணிக்க வேண்டும்.

ஆளும்தரப்பை பொறுப்பேற்று இந்த குறுகிய காலத்தில் மக்களுக்கு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். எங்களால் வழங்கக்கூடிய நிவராணங்களை வழங்கியுள்ளோம். முதல் வேலைத்திட்டமாக வறுமையை இல்லாமல் செய்தல் அடுத்ததாக நாட்டை டிஜிட்டல் மயமாக்கல் ஆகிய திட்டங்களை முன்னெடுக்கின்றோம். மக்களின் பொருளாதாரஸ்தீரத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தாத காரணத்தினாலேயே அநீதி காரணமாகவே சிவில் போர் நிலைமையும் உருவாகியது. இதனை நாங்கள் நன்றாக அடையாளம் கண்டுள்ளோம். இதற்கு பதில் தேடாமல் எதனையும் செய்ய முடியாது. இதனாலேயே சகலமக்களினதும் பொருளாதார உரிமைகளை அடிப்படையாகக்கொண்ட வேலைத்திட்டத்தை முன்னெடுக்கின்றோம்.

இதேவேளை நாங்கள் அரசமைப்புக்கு அமையவே செயற்படுவோம். நாங்கள் எமது இறையாண்மை, ஆட்புல அதிகாரம் ஆகியவற்றை பாதுகாத்தே தீர்மானங்களை எடுக்கின்றோம். எவ்வித வெளியார் அதிகாரங்களுக்கும் அடிபணிந்து தீர்மானங்களை எடுப்பதில்லை. அரசமைப்பில் மாகாண சபைகள் முறைமை உள்ளது. அந்த முறைமையால் எமது நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவில்லை. அன்றும் நாங்கள் இந்த மாகாண சபைகள் முறைமையால் தேசியப் பிரச்சினையை தீர்க்க முடியாது என்று கூறினோம். அது செயற்பாட்டு ரீதியில் உறுதியாகியுள்ளது. எனினும் அது அரசமைப்பில் உள்ள விடயமே.

இதன்படி மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டும். ஆனால் அந்தத் தேர்தலை நடத்துவதில் சட்ட ரீதியான இடையூறுகள் உள்ளன. இந்த நாடாளுமன்றத்தில் புதிய தேர்தல் முறை தொடர்பிலான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி எல்லை நிர்ணயம் நடந்தாலும் அந்த எல்லை நிர்ணய அறிக்கை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படவில்லை. இதனால் புதிய சட்ட மறுசீரமைப்புடன் தீர்மானத்தை நிறைவேற்றி அந்தத் தேர்தலுக்கான சட்ட ரீதியிலான வழியை ஏற்படுத்தலாம். இதற்காக குறிப்பிட்ட காலம் எடுக்கும். தற்போதைய கால அளவுகளைப் பார்த்தால் இதனை விரைவாக செய்ய முடியாது. இதனை நிச்சயமாக நடத்துவோம். அரசமைப்புக்கமைய அந்தத் தேர்தலை நாங்கள் நிச்சயமாக நடத்துவோம். அந்த ஜனநாயக உரிமையை பாதுகாக்க ஆளும்தரப்பு என்ற ரீதியில் நாங்கள் கடப்பட்டுள்ளோம்.

அத்துடன் தேசிய பிரச்சினைக்கு நிரந்த தீர்வை பெற்றுக்கொள்வதற்காக புதிய அரசமைப்புக்கான அவசியம் ஏற்பட்டுள்ளது. அதனை நாங்கள் எமது கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளோம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாட்டு மக்களின் யோசனைகளை பெற்று சர்வஜன வாக்கெடுப்புக்கு உள்ளாகும் புதிய அரசமைப்பு மறுசீரமைப்பை நாங்கள் செய்வோம். இதுவரையிலான அரசமைப்பு எதுவும் மக்களால் அனுமதிக்கப்படவில்லை. பலவந்தமாகவே திணிக்கப்பட்டது. ஆனால் நாங்கள் அந்த சம்பிரதாயத்தை மாற்றி மக்களின் அனுமதியுடன் புதிய அரசமைப்பை கொண்டு வருவோம். இது அவசரமாக செய்ய வேண்டியதில்லை. நாடென்ற ரீதியில் பொருளாதார ரீதியிலான பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கு முதலில் முகம்கொடுத்து அதனை தோற்கடித்தே புதிய அரசமைப்புக்கு செல்வோம்.

பொறுப்புக்கூறல் செயற்பாடு, தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் செயற்பாடு மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். நாங்கள் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இந்த விடயத்தில் எங்களுக்கு எவ்வித அரசியல் தேவையும் கிடையாது. நாட்டில் இருந்த நிலைமைகளுக்கு அமைய ஒரு சில சம்பவங்கள் நடக்கலாம். அவை அரசாங்கத்தால் திட்டமிட்டு செய்யப்படுபவை அல்ல. எவ்வாறியினும் நாட்டின் சகல பிரஜைகளின் உரிமைகளை பாதுகாக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கும். இதற்காக புதிய சட்டங்கள் கொண்டுவர வேண்டுமாயின் அதனையும் முன்னெடுக்கும்.

அதேபோன்று தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான ஐந்து வருட திட்டங்களும் ஆளும்தரப்பிற்கு உள்ளன. வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என சகல பிரதேசங்களிலும் வாழும் மக்கள் தொடர்பான தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் திட்டங்கள் அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐநா அமைப்பின் இலங்கை பிரதிநிதிகளின் தொழில்நுட்ப ரீதியிலான உதவிகளும் இதற்காக கிடைக்கின்றன. இதன்படி அந்த திட்டங்களில் ஒவ்வொன்றாக செய்து நாங்கள் முன்னால் செல்வோம்.

பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை உள்ளக செயற்பாட்டிலேயே பலப்படுத்துவோம். அதற்கு வெளிநாட்டு தலையீடுகள் அவசியமில்லை. தேசிய மட்டத்தில் அந்த செயற்பாடுகளை பலப்படுத்தியுள்ளதால் அது அவசியமில்லை. நீதித்துறைக் கூட்டமைப்பு சுயாதீனமாக்கப்பட்டுள்ளது. நீதித்துறையில் எவ்வித தலையீடுகளும் கிடையாது. இதனாலேயே பலவருடங்களாக எடுக்கப்படாத வழக்குகள் அண்மைக் காலங்களில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. அத்துடன் பொலிஸ் திணைக்களத்திலும் எவ்வித அரசியல் தலையீடுகளும் கிடையாது. தவறுகளை சரி செய்து நாங்கள் பொலிஸ் திணைக்களத்திலும் சுயாதீனத்துவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக தேசிய பொறிமுறையை பலமாக முன்னெடுத்துச செல்ல முடியும்.

முன்னர் இருந்த அரசாங்கங்களின் செயற்பாடுகளின் மீதான நம்பிக்கையின்மை காரணமாகவே பொறுப்புக்கூறல் செயற்பாடுகளுக்கு வெளியார் தலையீடுகள் அவசியமாகும் என்று அன்று சர்வதேச நாடுகள் கூறின. ஆனால் நாங்கள் அந்த நிலைமையை மாற்றியமைத்து நம்பிக்கையூடாக பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை பலப்படுத்த நடவடிக்கை எடுப்போம். நாங்கள் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதுடன், பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பிலும் பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம்.

பயங்கரவாத தடுப்புச் சட்டம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது ஐநா மனித உரிமைகள் பேரவையோ கூறும் வரையில் காத்திருக்கவில்லை. எமது கொள்கைப் பிரகடனத்தில் அந்த சட்டத்தை நீக்குவோம் என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளோம். அது தொடர்பில் ஏற்கனவே நாங்கள் குழுவொன்றை அமைத்துள்ளோம். அந்தக் குழுவினர் பல சந்தர்ப்பங்களில் கூடியுள்ளனர். அதன்படி தேவையான திருத்தங்களை மேற்கொண்டு இந்த மாத இறுதியில் அதனை நிறைவு செய்து எதிர்வரும் செப்டம்பர் ஆரம்பத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கும் சட்ட மூலவரைபை வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுப்போம். வெகுவிரைவில் சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

அதேபோன்று பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் ஒரு பகுதி தற்போதும் பயன்படுத்தப்படுகின்றது. அது இனங்கள் மற்றும் மதப் பிரிவினரை இலக்ககக் கொண்டு பயன்படுத்தப்படவில்லை. திட்டமிட்ட பாதாள குழுக்கள் மற்றும் குற்றக் கும்பல்களுடன் தொடர்புடையவர்களே அதிகளவில் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் தமிழ்,முஸ்லிம்கள் மட்டும் கைது செய்யப்படுகின்றார்கள் என்று கூற முடியாது. இதில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களின் அதிகமானவர்கள் சிங்களவர்களே. அவர்கள் பல்வேறு குற்றங்களுடன் தொடர்படையவர்களே. எவ்வாறாயினும் இந்த சட்டத்தை நீக்குவோம். எனினும் திட்டமிட்ட பாதாள குழுக்கள், போதைப் பொருள் வியாபரங்களை நிறுத்துவதற்காக பலமான சட்டத்தை நாங்கள் கொண்டு வருவோம்.

உண்மைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைப்பது தொடர்பில் நாங்கள் 2009ஆம் ஆண்டில் போர் நிறைவடைந்த காலத்தில் இருந்தே கூறுகின்றோம். எமது கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளோம். அதனை செயற்படுத்துவோம். இப்போது காணாமல் போனோர் அலுவலகம் தொடர்பான சட்டமூலத்துடன் பிரச்சினைகள் உள்ளன. அதில் குறைபாடுகள் தொடர்பில் பேசி அவற்றை திருத்தி உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்க நடவடிக்கை எடுப்போம்.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவற்றின் செயற்பாடுகள் கடந்த காலங்களில் பலவீனப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் நாங்கள் எமது கொள்கைக்கு அமைய அவற்றை பலப்படுத்துவோம். அதற்கு தேவையான நிதி மற்றும் மனித வளங்களை வழங்குவோம். இதேவேளை மனித புதைகுழிகள் தொடர்பில் கதைக்கப்படுகின்றன. செம்மணி உள்ளிட்ட மனிதஎலும்புகூடுகள் மீட்கப்படும் புதைகுழிகள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கு தேவையான வசதிகள் வழங்கப்படுகின்றன. இவற்றில் நாங்கள் எவ்வித தலையீடுகளும் செய்வதில்லை. பக்கச்சார்பற்ற சுயாதீனமான விசாரணைகள் நடக்கின்றன. ஐ. நா ஆணையாளர் வந்திருந்த போது அவற்றை பார்வையிட வசதிகளை ஏற்படுத்தியிருந்தோம். உறவினர்கள் அடையாளம் காணும் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.

தமது தாய், தந்தை, பிள்ளை அல்லது உறவினர்கள் இறந்த பின்னர் அவர்களை நினைவுகூரும் உரிமை எமது ஆளும்தரப்பினால் வழங்கப்பட்டுள்ளது. வடக்கை போன்று தெற்கில் வெள்ளளவத்தையிலும் நினைவுகூரல் இடம்பெற்றது. அதில் சகல இனத்தவர்ககளும் கலந்துகொண்டனர். இந்த உரிமையை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம். ஆனால் பிரிவினைவாத அமைப்புகளின் சின்னாங்கள், அவர்களை ஊக்கப்படுத்தும் வசனங்களைப் பயன்படுத்த முடியாது. இனவாதத்திற்குள் மீண்டும் தள்ளாதவாறு நினைவுகூரும் உரிமை வழங்கப்படுகின்றது. இவை அனைத்தும் தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காகவே ஆகும்.

நாங்கள் வடக்கில் பல பிரதேசங்களில் நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த வீதிகளை திறந்து மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். போர் காலத்தில் இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட காணிகள் விடுவிக்கப்படுகின்றன. தேசிய பாதுகாப்புக்கு தேவையான இராணுவ முகாம்களை நடத்தி மற்றைய தேவைகளுக்காக காணிகள் கையகப்படுத்தப்பட்டிருந்தால் அவற்றை அடையாளம் கண்டு விடுவிப்போம். முறையாக அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம். அதற்படியே அண்மையில் காணி அமைச்சினால் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டது. அந்தக் காணிகளின் உரிமைகளை உறுதிப்படுத்துமாறு கூறினோம். அதனைத் தவறாகப் புரிந்துகொண்டனர். எனினும் அது தொடர்பான கால அவகாசப் பிரச்சினை தொடர்பில் கருத்திற்கொண்டு அந்த வர்த்தமானியை வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளோம்.

ஆளும்தரப்பு என்ற வகையில் இந்த குறுகிய காலத்தில் எமது பொறுப்புக்கூறல் செயற்பாடு, மனித உரிமைகளைப் பாதுகாத்தல் செயற்பாடு, அவற்றுக்கு தேவையான சட்ட மாற்றங்கள் ஆகியவற்றை கட்டம் கட்டமாக செய்து நாங்கள் முன்னெடுத்து செல்வோம். இதனை நாங்கள் மனித உரிமைககள் ஆணைக்குழு கூறுவதால் செய்யவில்லை. இது எங்களின் பொறுப்பாகும். நாங்கள் அபிவிருத்திகளை முன்னெடுக்கும்போது வடக்கை கைவிட்டு செல்ல முடியாது. இப்போதே வடக்கு மாகாணத்தில் 3 முதலீட்டு வலயங்களை ஆரம்பிக்க காங்கேசன்துறை, மாங்குளம் மற்றும் பரந்தன் உள்ளிட்ட இடங்களில் இடங்களை அடையாளம் கண்டுள்ளோம். அதற்குத் தேவையான சட்ட விடயங்களையும் நிறைவுசெய்து அதனை அமைப்போம். பொதுவாக இலங்கையர்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது எங்களின் பொறுப்பாகும். நாங்கள் சுயாதீன நாட்டில் ஆட்புல எல்லையை பாதுகாக்கும் ஆளும்தரப்பாகும். இதனால் வெளி அழுத்தங்களுக்கு அடிபணிந்து தீர்மானங்களை எடுப்பதில்லை. நேர்மையாக எடுக்கும் தீர்மானங்களாகும் என்றார்.

## யார் தவறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது ஆளும்தரப்பு ஆட்சிக்கு வரமுன்னர் இந்த நாடு குற்றவாளிகளின் தேசமாகவும் ஒட்டுமொத்த சமூகமும் வீழ்ச்சியடைந்திருந்தது. அரச பொறிமுறை பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாகி மக்களுக்கு அரச சேவையை பெற்றுக்கொள்ள முடியாத நிலை இருந்து வந்தது. இவ்வாறான நிலையிலே அநுரகுமார திஸாநாயக்க இந்த நாட்டின் அரசுத் தலைவர்யாக தெரிவானார். ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து 8 மாதங்களில் வீழ்ச்சியடைந்திருந்த நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி இருக்கிறது. குறிப்பாக ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளது, தேசிய மட்டத்தில் வருமானம் அதிகரித்துள்ளது. பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பணம் அதிகரித்துள்ளது. இவ்வாறு பொருளாதார தரவுகளை பார்க்கும்போது ஆளும்தரப்பின் 10 மாதங்களில் நாட்டின் பொருளதார ஸ்திரத்தன்மையை கட்டியெழுப்ப எங்களுக்கு முடிந்திருக்கிறது. பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடிந்தமை எங்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.

மேலும் வீழ்ச்சியடைந்திருந்த சட்டத்தின் ஆட்சியை தற்போது நாங்கள் உறுதிப்படுத்தி வருகிறோம். மக்களுக்கு இல்லாமல் போயிருந்த நீதியை, நியாயத்தை இந்த சமூகத்துக்கு வழங்கி வருகிறோம். இன்று தராதரம் இல்லாமல் சட்டம் அனைவருக்கும் சமமாக செயற்படுத்தப்படுகிறது. அது பாலிஸ்மா அதிபரா, அமைச்சரா, முன்னாள் அரசுத் தலைவர்யா என்பது எங்களுக்கு ஏற்புடையதல்ல. அதனால் யார் தவறு செய்தாலும் அவர்களை சட்டத்துக்கு முன் கொண்டுவர இந்த ஆளும்தரப்பு பின்வாகப்போவதில்லை என்பதை தெளிவாக தெரிவிக்கிறோம்.

நாங்கள் இவ்வாறு செயற்படுத்தி இருக்கிறோம். அண்மையில் பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரின் மனைவி, புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த நடவடிக்கை பிரதி பொலிஸ்மா அதிபர் அறிந்த நிலையிலா இடம்பெற்றது என்பது தொடர்பில் விசாரணை இடம்பெறுகிறது. விசாரணையில் அவர் குற்றவாளியாகினால், அவருக்கு எதிராகவும் சட்டம் நிலைநாட்டப்படும். முன்னாள் பொலிஸ்மா அதிபர் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த நிலையில் தற்போது அவர் விலக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதனால் சட்டத்தை செயற்படுத்துவது என்பது தராதரம் பார்த்து செயற்படுத்தும் விடயமல்ல, தராதரம் பார்க்கப்படாமல் செயற்படுத்தப்படுவதாகும்.

ஊழல் மோசடி தொடர்பில் பாரியளவில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 6ம் பக்கம்....

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ரணிலின் கைது அவதானத்திற்குரியது

இலங்கை அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வை ஏற்படுத்திய செய்தி, முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது ஆகும். பல தசாப்தங்களாக நாட்டின் உயரிய அதிகாரங்களை வகித்தவர், பிரதமராகவும் அரசுத் தலைவர்யாகவும் இருந்து வந்தவர், இறுதியில் சட்டத்தின் முன் நிற்க வேண்டிய சூழலில் சிக்கியிருப்பது, நிச்சயமாக நாட்டின் ஜனநாயக மற்றும் அரசியல் நடைமுறைகளுக்கான ஒரு திருப்புமுனையாகக் கருதப்பட வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க இலங்கை அரசியலில் சுமார் ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக முக்கிய பங்காற்றியவர். ஐக்கிய தேசியக் கட்சியின் (UNP) நீண்டகாலத் தலைவர் என்ற முறையில் அவர் பலமுறை பிரதமராகப் பதவி வகித்தார். 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் சூழலில், நாட்டின் அரசுத் தலைவர்யாக பொறுப்பேற்ற அவர், சர்வதேச நிதி நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி, வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பை முன்னெடுத்தார். அவரது நடவடிக்கைகள் சிலரால் அவசியமானவை என பாராட்டப்பட்டாலும், பலரால் கடுமையாக எதிர்க்கப்பட்டன. குறிப்பாக, மக்களின் வாழ்க்கையைத் தாக்கிய வரி உயர்வுகள், விலைவாசி சுமைகள், கடன் நிபந்தனைகள் போன்றவை அவரது தலைமையில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய முடிவுகளாகும்.

இப்போது அவரது கைது நிகழ்வு, அவருடைய ஆட்சிக் கால நடவடிக்கைகளுக்கான அரசியல் மற்றும் சட்டரீதியான கணக்கெடுப்பு தொடங்கப்பட்டுவிட்டதாகச் சுட்டுகிறது.

ஒரு முன்னாள் அரசுத் தலைவரைக் கைது செய்வது எளிதானதல்ல. இது நாட்டின் ஜனநாயக பாரம்பரியத்திற்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் இடையே நுணுக்கமான சமநிலையைப் பேண வேண்டிய ஒன்றாகும். இதன் பின்னுள்ள விடயங்கள் அரசியல் பழிவாங்கலா, அல்லது உண்மையான நீதி நடைமுறையா என்பது இங்கு மிகப்பெரிய கேள்வியாகிறது.

இலங்கையின் அரசியல் வரலாறு முன்னாள் தலைவர்களுக்குச் சட்டத்தின் முன் சவால்கள் எழுந்த சம்பவங்களை நினைவுபடுத்துகிறது. முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்கா, மகிந்த ராஜபக்சே, கோட்டாபய ராஜபக்சே ஆகியோரும் தங்கள் ஆட்சி காலங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்காக விமர்சனங்களையும், விசாரணைகளையும் எதிர்கொண்டவர்கள். ஆனால் கைது நிலைக்கு வருவது அரிதான ஒன்று. ஆகவே, ரணிலின் கைது, நாட்டின் ஜனநாயக நடைமுறையில் ஒரு முன்னோடியான நிகழ்வாகக் கருதப்படலாம்.

இந்தக் கைது நிகழ்வு நாட்டின் அரசியல் வரைபடத்தையே மாற்றக்கூடியது. ஒருபுறம், மக்கள் நீண்டகாலமாகக் கேட்டு வந்த 'அரசியல்வாதிகள் பொறுப்பேற்க வேண்டும்' என்ற கோரிக்கை நிறைவேற்றப்பட்டதாக தோன்றலாம். மறுபுறம், ரணிலின் ஆதரவாளர்கள் இதனை அரசியல் பழிவாங்கல் என சித்தரித்து, சர்வதேச அளவிலும் பிரச்சினையாக்கக் கூடும்.

மேலும், அரசியல் கட்சிகள் இடையே உருவாகும் புதிய கூட்டணிகள், எதிர்க்கட்சிகளின் குரல் வலுப்பெறுதல், ஆளும்தரப்பின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் போன்றவை அடுத்த மாதங்களில் நாம் காணக்கூடிய அரசியல் விளைவுகளாக இருக்கலாம்.

இலங்கையின் தற்போதைய சூழலில் சர்வதேச நிதி நிறுவனங்களின் பங்கும், வெளிநாட்டு அரசுகளின் ஆதரவும் மிகவும் அவசியமாக இருக்கின்றன. இந்நிலையில், முன்னாள் அரசுத் தலைவர் ஒருவர் கைது செய்யப்படுவது சர்வதேச நம்பிக்கையை பாதிக்கக்கூடும் அபாயமுண்டு. வெளிநாட்டு முதலீட்டாளர்கள், நிதி நிறுவனங்கள் ஆகியவை நாட்டின் அரசியல் நிலைத்தன்மையை முதன்மையாகக் கண்காணிக்கின்றன. அதனால், இந்த கைது நிகழ்வு வெளிநாடுகளில் எவ்வாறு விளக்கப்படுகிறது என்பது முக்கிய அம்சமாகிறது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சட்டரீதியாக உறுதியான ஆதாரங்களோடு நிரூபிக்கப்பட வேண்டியது அவசியம். இல்லையெனில், இது அரசியல் நாடகமாக மட்டுமே போய் விடும். நீதித்துறை சுயாதீனமாகவும், வெளிப்படையாகவும் செயல்பட்டு, உண்மை நிலையை வெளிக்கொணர வேண்டிய கடமைப் பெற்றுள்ளது. மக்கள் நீதித்துறையை நம்பிக்கையுடன் அணுகுவதே ஜனநாயகத்தின் வலிமை.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது, இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு பெரும் திருப்பமாக கருதப்படவேண்டும். இது ஜனநாயகத்தின் வலிமையையும் சட்டத்தின் மேன்மையையும் வெளிப்படுத்தும் வாய்ப்பாக மாறலாம். அதேசமயம், இது அரசியல் பழிவாங்கலின் கருவியாகப் பயன்படுத்தப்படக்கூடாது.

ஆளும்தரப்பும் நீதித்துறையும் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டிய தருணம் இது. உண்மையான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், அதற்கான தண்டனை நியாயமாக வழங்கப்பட வேண்டும். இல்லையெனில், இது மக்களின் நம்பிக்கையை மேலும் சிதைக்கும்.

இலங்கை இன்று பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முயற்சி செய்து கொண்டிருக்கிறது. அத்தகைய நேரத்தில் அரசியல் நிலைமையும் சீராக இருக்க வேண்டியது அவசியம். ரணிலின் கைது சம்பவம் நாட்டின் அரசியல் எதிர்காலத்தை மாற்றக்கூடியதாக இருக்கலாம். ஆனால், அந்த மாற்றம் ஜனநாயக நாகரிகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் வலுப்படுத்தும் வகையிலேயே அமைய வேண்டும்.

# மனித உரிமைகள் விடயத்தில் ஒருதரப்பை மாத்திரம் வேறுபடுத்திப் பார்க்க முடியாது

## பிரதமர் ஹரினி திட்டவட்டம்

ஜனநாயகம் மற்றும் அடிப்படை உரிமைகளை முன்னிலைப்படுத்தியே நாங்கள் செயற்படுகிறோம். மனித உரிமை விடயத்தில் ஒரு தரப்பினரை மாத்திரம் வேறுப்படுத்திப் பார்க்க முடியாது. எங்கு தவறிழைத்தோம் என்று விளங்கிக் கொண்டு தவறுகளை திருத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்லவேண்டும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்லின சமூகத்துக்குரிய மரியாதைகள் மற்றும் உரிமைகளை அவரவருக்கு முறையாக வழங்கினால் முரண்பாடுகள் தோற்றம் பெறாது.சகல மக்களினதும் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆளும்தரப்புக்கு உண்டு. ஊழல் மோசடியற்ற அரச நிர்வாகத்தை உருவாக்கி சட்டவாட்சியை உறுதிப்படுத்தியுள்ளோம்.

கடந்த காலங்களில் அரசியல் கட்டமைப்பில் ஒரு தரப்பினருக்குமாத்திரம்சிறப்புசலுகைகள்வழங்கப்பட்டு பிறிதொரு தரப்பினர் புறக்கணிக்கப்பட்டதால் இந்த நாட்டில் பல பிரச்சினைகள் தோற்றம் பெற்றன. இவ்வாறான காரணிகளால் தான் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் கேள்விக்குள்ளாக்கப்பட்டது.

கடந்த காலங்களில் மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு சட்டத்தால் தண்டனையளிக்கப்படவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் மாற்று தீர்வு நடவடிக்கைகளை நாட முனைந்தார்கள். இன்று இந்நிலைமை மாறியுள்ளது. சட்டத்தால் அனைவரும் சமமாக மதிக்கப்படுகிறார்கள். சட்டம் சுயாதீனமான முறையில் செயற்படுத்தப்படுகிறது.

ஜனநாயகம் மற்றும் அடிப்படை உரிமைகளை முன்னிலைப்படுத்தியே நாங்கள் செயற்படுகிறோம். மனித உரிமைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கொண்டு வந்த இந்த பிரேரணைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மனித உரிமை விடயத்தில் ஒரு தரப்பினரை மாத்திரம் வேறுப்படுத்தி பார்க்க முடியாது. எங்கு தவறிழைத்தோம் என்று விளங்கிக் கொண்டு தவறுகளை திருத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றார்.

# பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்யும் அனைத்து மக்களுக்கும் பிரதிபலன்கள்

## அதற்கான திட்டங்கள் தயார் என்கிறார் அமைச்சர்

பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யும் அனைத்து இன, மத மக்களுக்கும் அதன் பிரதிபலன்கள் வழங்கப்படவேண்டும். அதற்கான வேலைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அனைத்து பிரிவினைவாதங்களையும் இல்லாதொழித்து சமத்துவத்தை ஏற்படுத்துவதன் மூலமே நாட்டில் மனித உரிமையை பாதுகாக்க முடியும் என அமைச்சர் சரோஜா சாவித்திரி தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைப் பிரச்சினைகள் தொடர்பாக

தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நேற்று சபையில் முன்வைத்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு நாம் செல்லும்போது எமது நாட்டில் நாம் எதிர் நோக்குகின்ற சவால்கள், தீர்மானங்கள் தொடர்பில் ஒரு நாடு என்ற வகையில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி பேதம் எதுவுமின்றி ஒன்றாக ஆலோசித்து சரியான தீர்வுகளை, முக்கிய விடயங்களை அங்கு பேச வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

ஒரு நாட்டின் நீடித்து நிலைக்கும் அமைதிக்கு அனைத்து மக்களுக்கும் சமமான வாய்ப்பு, நீதி, சமத்துவம் மற்றும் பொறுப்புக்கூறல் என்பது கட்டாயத் தேவை என்பதை நாம் முழுமையாக நம்புகின்றோம். இந்த சவால்களை எதிர்கொள்வதன் மூலமே ஒரு உண்மையான ஜனநாயக சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை முழுமையாக நம்புகின்ற ஒரு அரசியல் கட்சியே எமது கட்சி.

மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை உரிமைகள் தொடர்பில் நாம் பேசும்போது அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சிந்திக்கும்போது முக்கியமாக பொருளாதார அபிவிருத்தி பற்றி பேச வேண்டியுள்ளது.

அந்தவகையில் ஒரு நாட்டில் சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டுமானால் அந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் தமக்கு அன்றாட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான பொருளாதார உரிமை, சமத்துவத்தை வழங்குவது முக்கியமாகிறது.

நாட்டில் வாழும் அனைத்து மக்களும் இணைந்து நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவோமானால் அதில் ஒவ்வொருவருடைய பங்கும் எத்தகையது என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

பொருளாதார அபிவிருத்தியில் சமமான பங்கு அனைத்து பிரதேச மக்களுக்கும் பகிரப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியுடன் உள்ளோம்.

அந்த வகையில் ஆளும்தரப்பு வட மாகாணத்தில் வீதி அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி பெண்கள் தொடர்பான அபிவிருத்தி போன்றவற்றிற்கான திட்டங்களை எமது வரவு செலவுத் திட்டத்தில் நாம் உள்வாங்கியுள்ளோம்.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற வசதிகள் அனைவருக்கும் அவசியம். அந்த வகையில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதிகள் என அனைவருக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு காலமும் இந்திய வம்சாவளி மக்களாக புறக்கணிப்புக்குள்ளாகியிருந்த மலையக மக்களை இலங்கை பிரஜைகளாக உள்வாங்குவதற்கு எமது ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. முதன்முறையாக நாம் அதற்கான செயற் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்

அந்த மக்களின் பிறப்பு அத்தாட்சி பத்திரத்திலும் இதுவரை காலம் இந்திய வம்சாவளி என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த வகையில் அவர்கள் இலங்கை மலையக மக்கள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்கள் அதனை நாம் பெருமையுடன் தெரிவிக்க விரும்புகின்றோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மலையகத் தமிழ் மக்கள் என்ற சொற்பதத்தை ஆவணங்களில் உள்வாங்க சட்டத் திருத்தங்கள்

## அயலுறவுத்துறை அமைச்சர் உறுதிமொழி

மலையக தமிழ் மக்கள் என்ற சொற்பதத்தை சட்ட ஆவணங்களில் உள்ளடக்க தேவையான சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். சனத்தொகை கணக்கெடுப்பின்போதும், பிறப்புச் சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழ்கள் உள்ளிட்ட ஏனைய சான்றிதழ்களிலும் மலையக தமிழ் மக்கள் என்ற சொற்பதம் பயன்படுத்தப்படும். சகலரின்ஒத்துழைப்புடன்எதிர்காலத்தில்இதனை செய்வோம் என அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையகமக்கள்பிரத்தியேககலாசாரங்களை கொண்டமக்கள் என்றுஏற்றுக்கொண்டுள்ளோம். அது எங்களின் கொள்கையாகும். ஹட்டன் பிரகடனத்தில்இதுதொடர்பில்குறிப்பிட்டிருந்தோம். அதன்படி அந்த மக்கள் மலையக தமிழ் மக்கள் என்று இன்றைய பிரேரணையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன்ஐ.நாமனித உரிமைகள் ஆணையாளரும் அவ்வாறு இந்த மக்களை அழைப்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்.

அடுத்ததாக சட்ட ஆவணங்களிலும் இந்த வசனம்உள்ளடக்கப்படவேண்டும். இதற்காகசில சட்டத்திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளோம். சனத்தொகை கணக்கெடுப்பின் போதும், பிறப்புச் சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழ்கள் உள்ளிட்ட ஏனைய சான்றிதழ்களிலும் இந்த வசனத்தை பயன்படுத்த தேவையான சட்ட திருத்தங்களை செய்ய வேண்டும். சகலரின் ஒத்துழைப்புடன் எதிர்காலத்தில் இதனை செய்வோம். சில தரப்பினர் இணங்காமல் இருந்தாலும் அவர்களையும் இணங்கச் செய்து அதனை செய்வோம்.

மலையகமக்கள்இலங்கையர்களே. அவர்களைஏற்றுக்கொண்டு அவர்களின் உரிமைளை பாதுகாக்க வேண்டியது எங்களின் பொறுப்பாகும். அவர்களுக்கென காணிகள்,வீடுகள் இருக்க வேண்டும். அத்துடன் சிறந்த கல்வி மற்றும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட வேண்டும். அதன்படியே ஹட்டன் பிரகடனத்தை நாங்கள் முன்வைத்தோம். இவர்களே இந்த நாட்டில் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்காக வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் என்றார்.

# யாரைச் சிறைச்சாலைக்கு அனுப்புவது என்று யூரியூப்பர்கள் முடிவு செய்ய அனுமதிப்பதா?

## சாமர சம்பத் எம்.பி. நாடாளுமன்றில் சீற்றம்

நாட்டில் சட்டம் அனைவருக்கும் பொதுவானது என்று ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். இது உண்மையா, முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று ( நேற்று ) வாக்குமூலமளிக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு முன்னிலையாகினார்.எஆனால் அவர் கைது செய்யப்படுவதாக யுடியுபர் சுதா என்பவர் முன்னதாகவே குறிப்பிடுகிறார். யூடியூபர் சுதா நீதிபதியா , யாரை சிறைக்கு அனுப்ப வேண்டும் என்று தீர்மானிப்பதற்கு .இவ்வாறானவர்களின் முறையற்ற கருத்துகளுக்கு ஆளும்தரப்பே இடமளித்துள்ளது. இது வெட்கத்துக்குரியதொரு செயற்பாடு என புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் சாடினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரலாற்றை மறந்துவிட்டுச் செயற்பட கூடாது. வடக்கு ,கிழக்கு மற்றும் மலையக மக்களின் மனித உரிமைகள் மீறல் பற்றியே பேசப்படுகிறது. இந்த மாகாணங்களை தவிர்த்து ஏனைய மாகாணங்களில் உள்ளவர்களின் மனித உரிமைகளும் மீறப்பட்டுள்ளன. அவை பற்றி எவரும் பேசுவதில்லை.

நாட்டில் சட்டம் அனைவருக்கும் பொதுவானது என்று ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். இது உண்மையா, முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று ( நேற்று ) வாக்குமூலமளிக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு முன்னிலையாகினார்.ஆனால் அவர் கைது செய்யப்படுவதாக யூடியூபர் சுதா என்பவர் குறிப்பிடுகிறார்.

யூடியூபர் சுதா நீதிபதியா யாரை சிறைக்கு அனுப்ப வேண்டும் என்று தீர்மானிப்பதற்கு இவ்வாறானவர்களின் முறையற்ற கருத்துகளுக்கு ஆளும்தரப்பே இடமளித்துள்ளது. இது வெட்கத்துக்குரியதொரு செயற்பாடு.

நாட்டின்பிரதமர்ஹரிணிஅண்மையில்பொதுநிகழ்வொன்றுக்கு சென்றுள்ளார். அவ்விடத்தில் வைத்து இந்த சுதா என்பவர் பிரதமர் தோளில் அடித்து பேசியுள்ளார். இது வெட்கத்துக்குரிய செயற்பாடு. பிரதமரிடம் இவ்வாறாக நடந்துக்கொள்வது. நாயுடன் உறங்கினால் உன்னிகளுடன் எழும்ப வேண்டும் என்ற பழமொழியை ஞாபகப்படுத்துகிறது.

மலையக மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்கிறோம். முன்னாள் அரசுத் தலைவர்களான சந்திரிக்கா, மஹிந்த ஆகியோரின் ஆட்சியில் பெருந்தோட்ட மக்களுக்குப் பல அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன. மலையக மக்கள் ஒருபோதும் எமக்கு ஆதரவளிக்கவில்லை. ஆனால்


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

## யார் தவறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த காலங்களில் இடம்பெற்ற அநியாயங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. அதனால் நாட்டில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதியை பெற்றுத்தருவதாக உறுதியாளிக்கிறோம். சிரேஷ்ட ஊடகவியலாளர் லசன்த விக்ரமசிங்கவின் கொலை தொடர்பான சாட்சிகள் மறைக்கப்பட்டிருந்தன.தற்போது அந்த சாட்சிகள் அனைத்தும் மீள எடுக்கப்பட்டு, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று கீத்நோயர் மீதான தாக்குதல் தொடர்பான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசாரணைகள் முடிக்கப்பட்டு, தற்போது சட்டமா அதிபருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதுதொடர்பான குற்றப்பிரேரணை விரைவில் வழங்கப்படும். ஊடகவியலாளர் எக்னலிகொட கடத்தப்பட்டமை தொடர்பான நீதிமன்ற விசாரணை இடம்பெறுகிறது. அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளும் இடம்பெற்று வருகிறன்றன. அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதியை நிலைநாட்டுவோம். அதில் எந்த சந்தேகமும் இல்லை.

அதேபோன்று போர்த்தில் மரணித்தவர்களை நினைவுகூரும் உரிமையை நாங்கள் உறுதிப்படுத்தி இருக்கிறோம். அது அவர்களின் உரிமை.என்றார்.

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் செய்துள்ள பதிவிலேயே எதிர்க்கட்சி தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தனது பதிவில், குறித்த யூடியூப் சமூக வலைத்தள நபரின் கணிப்பு தற்செயலானதா அல்லது திட்டமிடப்பட்டதா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

''யூடியூபர் ஒருவர் முன்னாள் அரசுத் தலைவர் கைது செய்யப்படுவார் என்பதை நடப்பதற்கு முன்னமே எதிர்வு கூறுவது எவ்வாறு? இது வெறும் தற்செயல் நிகழ்வாக இருக்க முடியாது, இது ஒரு திட்டமிட்ட நிகழ்வாக அமைந்திருக்க முடியுமா? அது உண்மையாக இருந்தால், சட்டம் ஒழுங்கு போன்ற உன்னதமானதொரு விடயம் மலிவான நாடகக் காட்சியாக மாறும் அந்நாள் மோசமானதொரு நாளாகும்'' என எதிர்க்கட்சி தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க அரசுத்தலைவர்யாக இருந்தபோது லண்டனுக்கு வெளிநாட்டு சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்காக அரச நிதியை தவறாகப் பயன்படுத்தியதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு அவரை நேற்று கைது செய்தது. இந்நிலையில் இது தொடர்பில் நடிகரும் யூடியூபருமான சுதத்த திலகசிறிக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க நாடாளுமன்றத்திலும் கேள்வியெழுப்பியிருந்தார்.

அத்தோடு முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரியும் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார். 'ஒரு யூடியூபர் கணித்தபடி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளது மிகவும் கவலையளிக்கிறது. இத்தகைய நடவடிக்கைகள் நீதித்துறையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும், பழிவாங்கும் மற்றும் அழிவுகரமான அரசியலின் தொந்தரவான போக்கை பிரதிபலிக்கின்றன. இந்த சுழற்சி முடிவுக்கு வர வேண்டும். இலங்கை பகுத்தறிவு மற்றும் ஸ்திரத்தன்மை கொண்ட அரசியலுக்கு தகுதியானது என்பதை நினைவுபடுத்துகின்றோம்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தீர்வு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த கால ஆட்சியாளர்களை போன்று தற்போதைய அரசுத் தலைவரும் செயற்படக்கூடாது. கடந்த தீர்வு திட்டங்களை மக்கள் விடுதலை முன்னணிதான் எதிர்த்தது. எதிர்த்தவர்களே தீர்வு வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே காத்திரமான நடவடிக்கைகளை பகிரங்கமாக அறிவியுங்கள். பேச்சு ஊடாகத் தீர்வு காண தயாராகவே உள்ளோம் என இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணையை கொண்டு வந்துள்ளேன். இலங்கையில் வாழும் சுதேசிய இனத்தவர்களான தமிழ் தேசிய மக்கள் நீண்டகாலம் எதிர்கொண்டு வரும் அன்றாட பிரச்சினைகள் தொடர்பில் இப்பிரேரணையை முன்வைக்கிறேன்.

தேசிய இனப்பிரச்சினைக்கு கௌரவமான நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வை எட்டுவதற்கும், அதிகார பகிர்வுக்கான பேச்சுவார்த்தை கதவுகளை திறப்பதற்கும், கடந்த எட்டு ஆண்டுகாலமாக தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ,தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாத தடைச்சட்டம் ஊடாக கைதுகளும், ஊடகவியலாளர்கள் மற்றும் சுயாதீன செயற்பாட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மலையக மக்கள் எதிர்கொள்ளும் காணி, வீட்டுரிமைக்கான கடந்த கால தீர்வு முயற்சிகள் இன்றும் .இழுபறிநிலையில் உள்ளன. இந்த பிரச்சினைகளுக்கு இதுவரையில் தீர்வு கிடைக்கவில்லை

இந்த நாட்டில் தமிழ் தேசிய இனம், சிங்கள தேசிய இனம் என்று இரண்டு தேசிய இனங்கள் உள்ளன.தேசிய இனங்களுக்கிடையிலான நீண்டகால பிரச்சினைகள் சுமார் 80 ஆண்டுகாலமாக நிலைத்திருக்கின்றன.இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு முன்மாதிரியான நடவடிக்கைகள் ஏதும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. 1957 ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தம், 1965 டட்லி - செல்வா ஒப்பந்தமும் இந்த நாட்டில் கிழித்தெறியப்பட்டன. இவை அடிப்படை தீர்வாக முன்வைக்கப்படவில்லை.

தமிழ் அரசியல் தலைவர்கள் நீதியான முறையில் அரசியல் தீர்வை பெற்றுக் கொள்வதற்கு நாடாளுமன்றத்தில் முன்வைத்த கோரிக்கைகள், பிரேரணைகள் கிடப்பில் போடப்பட்டன.ஒரு அரசியல் தீர்வுக்கான முக்கிய அடி த்தளத்தையிட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டு 38 ஆண்டுகளை கடந்துள்ளது.இருப்பினும் இந்த ஒப்பந்தம் படுக்கையில் கிடக்கும் நோயாளி போன்றே இன்றும் உள்ளது. எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

அரசியல் தீர்வுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட சர்வதேச ஒப்பந்தமான இலங்கை - இந்திய ஒப்பந்தம் இன்றும் இழுபறி நிலையில் உள்ளது. முன்னாள் அரசுத் தலைவர் ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சியில் மங்கள முனசிங்க தெரிவுகுழு யோசனைகள் முன்வைக்கப்பட்டன.இந்த யோசனைகள் பேசப்பட்ட காலத்தில் எவ்வித தீர்வுகளும் எடுக்கப்படவில்லை.

பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம், மங்கள முனசிங்க தெரிவுக்குழு யோசனைகள் உட்பட அனைத்தும் கிடப்பில் போடப்பட்டுள்ளன.முன்னாள் அரசுத்தலைவர் சந்;திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க 1995-1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொண்ட தீர்வு ஆலோசனைகளின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடாளுமன்றத்துக்கு சட்டமூலமாக தீர்வு ஆலோசனையாக ' பிராந்திய கூட்டு' சமர்ப்பிக்கப்பட்டது.இதுவும் காலவோட்டத்தில் மறக்கடிக்கப்பட்டது. சிங்களத் தலைவர்கள் இந்த திட்டங்களை கடுமையாக எதிர்த்தார்கள்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த காலப்பகுதியில் ஒஸ்லோ மற்றும் டோக்கியோவில் வெளியிடப்பட்ட பிரகடனங்கள் ஏதும் அமுல்படுத்தப்படவில்லை. முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட சர்வக்கட்சி பிரதிநிதிகள் குழு, பல்லின நிபுணர் குழு அதிகார பகிர்வுக்கு 13 பிளஸ் என்பதை வலியுறுத்தின.

இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்தை நிறைவு செய்யவுள்ள நிலையில் 80 ஆண்டுகள் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காண ஆளும்தரப்பு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்ற கேள்வி எழுகிறது.அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நாடாளுமன்றத்தில் 7 தடவைகள் விசேட உரையாற்றியுள்ளார். இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் மூலோபாயம் மற்றும் அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அரசுத் தலைவர் வெளிப்படையாக குறிப்பிடவில்லை.

ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் தாய் கட்சி கடந்த காலங்களில் பாரிய போராட்டங்களை எதிர்கொண்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் 62 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளார்கள்.ஆகவே போராட்டங்களின் விளைவுகளை அவர்கள் நன்கு அறிவார்கள். இந்த சித்திரவதைகளை நாங்களும் எதிர்கொண்டுள்ளோம். தமிழ் மக்கள் தமது விடுதலைக்காக பாரிய போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.இழப்புக்கள் மாத்திரமே மிகுதியாகின.போர் முடிவடைந்ததன் பின்னரும் தமிழ் மக்களின் உடல்கள் பல்வேறு இடங்களில் கண்டறியப்படுகின்றன.தேசிய விடுதலைக்காக ஆயுதமேந்திய போராட்டம் .ஜனநாயக போராட்டங்கள், அரசியல் போராட்டங்கள் ஆயுதமுனையில் நசுக்கப்பட்டதால் எம்மக்கள் ஆயுதமேந்தினார்கள்.

இதனை சுட்டிக்காட்டி மேதகு பிரபாகரன் ' ஜே.ஆர் ஜயவர்தன சரியான பௌத்தராக செயற்பட்டிருந்தால் நாங்கள் ஆயுதமேந்தும் நிலை ஏற்பட்டிருக்காது' என்று குறிப்பிட்டிருந்தார்.1952 ஆம் ஆண்டு எமது தமிழ்த்தலைவர்கள் காலிமுகத்திடலில் அமைதி வழிபோராட்டத்தில் ஈடுபட்டபோது இராணுவம், பொலிஸ் மற்றும் குண்டர்களை கொண்டு எமது தலைவர்கள் தாக்கப்பட்டார்கள்.இதன் பின்னரே எமது அறவழி போராட்டங்கள் நசுக்கப்பட்டன. நாங்கள் உங்களிடம் சவா ல்விடவில்லை. ஏட்டிக்குப்போட்டியாக செயற்படவில்லை. எம்மை சமமாக கொண்டு அரசியல் தீர்வுக்குரிய பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.

தேசிய இனத்துடனான அடையாளத்துடன் ஒன்றிணைந்து பயணிக்கவே விரும்புகிறோம்.இந்த நாட்டில் பூர்வீக மாக தமிழர்கள் வாழ்ந்துள்ளார்கள். இயக்கர், நாகர்கள் வாழ்ந்துள்ளார்கள். நாங்கள் இறையான்மையுடன் வாழ்ந்துள்ளோம்.இந்த இறையான்மை சிங்கள வல்லாதிக்கத்தில் இன்றும் உள்ளது. இனப்பிரச்சினைக்கு தீர்வினையே நாங்கள் கோருகிறோம். ஒன்றுப்பட்ட,தூய்மையான மற்றும் வளமான இலங்கையை எதிர்பார்ப்பதாக அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார்.அவ்வாறாயின் ஏன் எம்மையும் தேசிய இனமாக இணைத்து பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இலங்கை முன்னேற்றமடைய வேண்டுமாயின் அச்சமின்றிய வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். சமாதானத்துக்கான கதவுகளை திறங்கள். கலந்துரையாடுவதற்கு தமிழ் தலைமைகள் தயாராகவுள்ளோம். எம் மக்களை யார் கொன்று குவித்தார்களோ, அவர்களிடமே விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. குற்றம் புரிந்தவர்களே நீதிபதிகளாக இருக்கையில் எவ்வாறு உள்ளக பொறிமுறை ஊடாக நீதி கிடைக்கும்.

யாழ்ப்பாணம் செம்மணியில் கண்டுப்பிடிக்கப்படும் மனித எலும்புகூடுகள் தமிழர்களுடையது என்பது உறுதியாகியுள்ளது.இயற்கை என்றும் தவறு விடுவதில்லை. இந்த சித்துப்பாத்தி எலும்புகூடுகளை இயற்கையே காட்டிக்கொடுத்தது.இவ்விடயம் தொடர்பில் அரசுத்தலைவர்க்கு பல கடிதங்களை அனுப்பி வைத்துள்ளேன்.இந்த கடிதங்களை சபைக்கு சமர்ப்பிக்கிறேன்.

சிவில் நடவடிக்கைகளில் இராணுவத்தின் செயற்பாடுகள், அடக்குமுறைகள், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எடுத்துரைத்துள்ளேன்.அண்மையில் முத்தையன்கட்டு பகுதியில் இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். மனிதர்கள் தவறிழைக்கலாம். ஆனால் அடித்துகொலைசெய்வதற்கு இராணுவத்துக்கு யார் அனுமதியளித்தது.. இவ்வாறான பிரச்சினைகளுக்கு ஆளும்தரப்பு உடன் தீர்வு காண வேண்டும்.

1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் கொண்டு வரப்பட்ட போதும் எதிர்ப்பு தெரிவித்தீர்கள், 2000 ஆம் ஆண்டு வடக்குகிழக்கு தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததும் நீங்கள் வடக்கு கிழக்கை பிரித்தீர்கள். ஆகவே பிரச்சினைகள் உங்களிடம் உள்ளது. கடந்த கால தீர்வுகளை இல்லாதொழிக்க மக்கள் விடுதலை முன்னின்று செயற்பட்டது. ஆகவே தற்போது புதிய முகம் கொண்டுள்ளீர்கள். ஆகவே பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை எடுங்கள்.

வரலாறு மீண்டும் ஒரு அரிய வாய்ப்பினை உ ங்களுக்கு வழங்கியுள்ளது.முன்னாள் அரசுத்தலைவர்கள் விட்ட தவறை இந்த அரசுத் தலைவர் புரியமாட்டார் என்று எண்ணுகிறோம். கடந்த கால தலைவர்களை இந்த மண் மறந்தை போன்று தற்போதைய அரசுத் தலைவர்யையும் எவரும் மறக்க கூடாது. ஆகவே வரலாற்றில் ஒரு அடையாளமாக அரசியல் தீர்வு காணுங்கள், காத்திரமான நடவடிக்கைகளை எடுங்கள். தீர்வு திட்டங்கள் என்னவென்பதை அறிவியுங்கள். இந்த பிரேரணை ஊடாக ஒரு புதிய வழி பிறக்கும் என்று கருதுகிறேன் என்றார்.

## உயர் குருதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்படுவதற்காக கைவிலங்கிடப்பட்டு சிறைச்சாலைப் பேருந்தில் ரணில் விக்கிரமசிங்க, பலத்த பாதுகாப்புடன் வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டார்.

## சமஷ்டி தொடர்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்பாட்டை வலியுறுத்தி வரும் கட்சியாகும். ஆனால் இந்தப் பிரேரணையில் தமிழரின் இனப்பிரச்சினக்கான தீர்வு தொடர்பான சமஷ்டி என்ற கருத்து வலியுறுத்தப்படவில்லை. அண்மைக்காலமாக தமிழ் அரசு கட்சியின் தலைமைத்துவத்தின் செயற்பாடுகள் அந்த நிலைப்பாட்டில் இருந்து விலகியுள்ளதாகவே எங்களின் குற்றச்சாட்டு உள்ளது. ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவ்வாறான குற்றச்சாட்டை குறிப்பிடக்கூடியவர் அல்லர். எனினும் இந்தப் பிரேரணையானது அந்தக் கொள்கையை தவிர்த்திருப்பது எங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது.

கடந்த தேர்தலில் சமஷ்டிக்கும் மற்றும் பொறுப்புக்கூறலில் சர்வதேச விசாரணைக்காகவே ஆணையைப்பெற்றது. ஆனால் சர்வதேச விசாரணையும் இந்தப் பிரேரணையில் தவிர்க்கப்பட்டுள்ளமை ஆச்சரியத்தை கொடுக்கின்றது. ஏன் இதனை குறிப்பிடுகின்றேன் என்றால் இந்த ஆளும்தரப்பு பக்கச்சார்பற்ற விசாரணையை நாங்கள் செய்வோம் என்றே கூறுகின்றது. கடந்த 70 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தின்படி இலங்கையின் இனப்பிரச்சினை இனவாதத்தின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது என்று ஆளும்தரப்பே கூறுகின்றது. அப்படியெனில் கடந்த 76 வருடங்களாக இயங்கிய அரச கட்டமைப்பில் தமிழர்கள் நம்பிக்கை வைக்க முடியுமா?

இதேவேளை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறாக பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்று ஆளும்தரப்பு கூறுகின்றது. ஆனால் கடந்த வாரத்தில் குமணன் என்ற ஊடகவியலாளர் அழைக்கப்பட்டு அவரிடம் 7 மணித்தியாலங்கள் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இராணுவம் கொலைகளை செய்கின்றது. இந்த ஆளும்தரப்பிலேயே இது நடக்கின்றது. இந்த ஆளும்தரப்பு அந்த மனோநிலையில் இல்லை என்று கூறினாலும் அது நடப்பதற்கான காரணங்கள் உள்ளன. அந்த மாற்றங்களை செய்வதற்கு இந்த ஆளும்தரப்பு நேர்மையாக செயற்பட தயாராக இருந்தாலும் இந்த ஆளும்தரப்பு நிரந்தரமாக இங்கிருக்கப் போவதில்லை. ஜனநாயகத்தை கடைபிடிக்கும் அரசாங்கமாக இருந்தால் ஆளும்தரப்பு மாறும். இருந்தவர்கள் இனவாதிகள் என்று இவர்களே கூறுகின்றனர்.

கடந்த 76 வருடங்களுக்கு மேலாக

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## சமஷ்டி தொடர்பி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு எப்படி கிடைக்கும். ஜே.வி.பி அல்லது என்.பி.பியை நிரந்தரமாக ஆட்சியில் வைப்பதன் ஊடாக மட்டுமே அதனை செய்யலாம். தமிழ் மக்கள் கண்மூடிக்கொண்டு அவர்களுக்கு வாக்களித்துக்கொண்டு இருக்க வேண்டும் என்பதா தீர்வு. தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் தீர்வு கிடைக்காதா? யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களுக்கு இனவாதம் பாயாது, பயங்கரவாத தடைச் சட்டம் பாயாது என்ற பாதுகாப்பு அவசியமல்லவா. எமது தேச அடையாளம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது என்றால் அந்த தேச அடையாளத்தை அங்கீகரித்து நாங்களும் இந்த தேசத்தில் நிரந்தரமானவர்கள் என்பதனை அங்கீகரிப்பதில் என்ன தவறு உள்ளது. எனது சொந்த வீட்டில் என்னுடைய பிரச்சினையை கையாழுவதில் என்ன பிரச்சினை உள்ளது. நாங்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கின்றோம். ஏன் அனை மறுக்கின்றீர்கள். உங்களின் வாயால் அந்த வாக்குறுதியை வழங்காமல் இருக்கின்றீர்கள். இதனை இந்த ஆளும்தரப்பு செய்வதற்கு தயாராக இல்லை.

கடந்த 76 வருடங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பயன்படுத்திய அதே சொற்பதற்களை இந்த ஆளும்தரப்பு பயன்படுத்த முடியாது. ஆனால் அதுதான் இன்னும் நடக்கின்றது. இங்கு தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்குவதில் என்ன தவறு? தமிழ் மக்களுக்கு தமது உரித்த இடத்தில் அங்கீகாரத்தை வழங்கி அவர்கள் ஆளக்கூடியதை உறுதிப்படுத்துவதில் என்ன பிரச்சினை உள்ளது. நாங்கள் வேறுபட்டவர்கள் என்பதை அங்கீகரிப்பதில் என்ன பிரச்சினை. இதன்மூலம் ஒற்றுமையை உருவாக்காதா? கடந்த 76 வருடங்களாக இலங்கையர்கள் என்ற போர்வையில் சிங்கள பௌத்தம் மட்டுமே ஆட்சி செய்தது. நிரந்தர பெரும்பான்மை இனத்தின் நலன்களை மட்டும் கடைபிடித்த வரலாறுதான் உண்டு. இதனை நீங்கள் 5 வருடங்களில் மாற்ற முடியாது. நீங்கள் எத்தனை வருடங்கள் இருந்தாலும் ஜனநாயக ரீதியில் ஒருநாளில் உங்களின் ஆட்சி விழத்தான் போகின்றது. வருகின்றவர்கள் பழையபடி நடந்துகொண்டால் தமிழ் மக்களின் நிலைமை என்ன? இதனை அரசமைப்பின் ஊடாக அங்கீகரிக்க கோருவது இனவாதமா? இது தவறா?

தென்னிலங்கை மக்கள் கடந்த 76 வருடங்களாக நடந்த அரசியலை கைவிட்டுள்ளனர். அதனால்தான் நீங்கள் ஆட்சிக்கு வந்துள்ளீர்கள். அந்த நிமிடத்தை நாங்கள் கைவிடக்கூடாது. இது திரும்பவும் வரப்போவதில்லை. உங்களுக்கு அந்த சந்தர்ப்பம் உண்டு. உங்களை முற்றிலும் வித்தியாசமான தரப்பாக சிங்கள மக்கள் பார்க்கின்றனர். இவ்வளவு காலங்களிலும் இனவாதிகள் என்று நீங்களே குறிப்பிடுபவர்கள் கடந்த காலங்களில் செய்தவை அனைத்தையும் கேள்விக்கு உட்படுத்துவதில் சிங்கள மக்கள் உள்ளனர். இதனால் உங்களுக்கு ஒரு கடமை உள்ளது. அதாவது தமிழ் மக்கள் கூறும் சமஷ்டி பிரிவினைவாதம் அல்ல என்ற உண்மையை சிங்கள மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். நீங்கள் சமஷ்டியை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சமஷ்டி பிரிவினைவாதம் அல்ல என்ற உண்மையை நீங்கள் கூற வேண்டும். அந்த விவாதத்தை வெளிப்படையாக நடத்தலாம் என்று நீங்கள் கூறலாம். 76 வருடங்களாக சிங்கள மக்களுக்கு கூறிய பொய்களை இன்றும் நீங்கள் திருத்தாமல் இருக்கின்றீர்கள். இங்கேதான் எங்களுக்கு சந்தேகங்கள் எழுகின்றன. ஒற்றையாட்சித்தான் விருப்பம் என்று நீங்கள் கூறினாலும் தமிழர்கள் கூறும் சமஷ்டி பிரிவினை இல்லை. உலகததில் முன்னேறியுள்ள நாடுகள் கடைபிடிக்கின்ற கொள்கை அதனையும் நாங்கள் விவாதிக்கலாம் பேசலாம் என்ற உண்மையை கூறுங்கள். இப்போது நீங்கள் உண்மையில் திருந்திவிட்டீர்கள். உங்களுடைய ஆளும்தரப்பு மற்றையவர்கள் போலல்ல. நீங்கள் வித்தியாசமானவர்கள் என்ற அடிப்படை நம்பிக்கையாவது வளரத் தொடங்கும். அதுவரையிலும் அந்த நம்பிக்கை வருவது என்பது மிகவும் கடினமான விடயமே என்றார்.

## வலுசக்தி அமைச்சர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் நிஹால், கைவிரல் ரேகைப் பதிவிற்கு எதிர்ப்பினை வெளியிட்டுவதற்கும், மேலதிக வேலை நேர கொடுப்பனவைக் கோரியும் நாம் வேலை நிறுத்தத்தை முன்னெடுத்துள்ளதாக ஆளும்தரப்பு மக்கள் மத்தியில் தவறான கருத்தினைப் பரப்புகின்றது. அந்த காரணிகளுக்காக மாத்திரம் நாம் வேலை நிறுத்தத்தை முன்னெடுக்கவில்லை என்பதை மக்களிடம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பேச்சுக்களின் ஊடாக மாத்திரமே வேலை நிறுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவர முடியும். அதனை விடுத்து அச்சுறுத்தல்களால் எம்மை அடிபணியச் செய்ய முடியாது. அவ்வாறு ஆளும்தரப்பு எதற்கேனும் முயற்சித்தால் நாம் சட்ட ரீதியாக அவற்றை எதிர்கொள்வோம் என்றார்.

தலைமை அலுவலக வளாகத்தில் அதிகளவானோர் கூடியதையடுத்து அங்கு பாதுகாப்பிற்காக பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். எவ்வாறிருப்பினும் நேற்று பணிக்கு திரும்பாத அனைவரும் சேவையிலிருந்து விலகியவர்களாகக் கருதப்படுவர் என தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் இது தொடர்பில் கடிதம் மூலம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. எவ்வாறிருப்பினும் நேற்றைய தினமும் பெரும்பாலான மாவட்டங்களில் பிரதான தபாலகங்கள் மூடப்பட்டிருந்தன. இதன் காரணமாக தமது அவசர தேவைகளைக்கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.



# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி அந்தப் பெருமையை ஏற்றுக்கொள்க

## ஸ்ரீநேசன் எம்.பி. வலியுறுத்து

பயங்கரவாத தடைச்சட்டம் நிபந்தனையற்ற வகையில் நீக்கப்பட வேண்டும். இந்த சட்டம் இலங்கை அரசுக்கு கேவலத்தை, அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது. இது ஜனநாயக நாடா என்று கேள்வியெழுப்படுகிறது. இளைஞர்கள் ஆயுதமேந்துவதற்கு இந்த சட்டம் தூண்டியுள்ளது. அத்துடன் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாட பயங்கரவாத தடைச்சட்டம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. ஜே.ஆர் ஜயவர்தன கொண்டு வந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி அதன் பெருமையை பெற்றுக்கொள்ளுங்கள் என்று இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் ஆளும்தரப்பிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பற்றி மிகவும் முக்கியமான தருணத்தில் தான் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபை ஒத்திவைப்பு விவாதத்தை கொண்டு வந்துள்ளார். 1948 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற சுதந்திரத்தை அனைத்து இன மக்களும் அனுபவித்துள்ளார்களா என்ற கேள்வியெழுந்தள்ளது. இந்த நாடு சுமார் 50 ஆண்டுகாலமாக பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகால சட்டம் ஆகியவற்றால் ஆளப்பட்டுள்ளது.

முன்னாள் அரசுத் தலைவர் ஜே.ஆர். ஜயவர்தன 1979 ஆம் ஆண்டு 06 மாத காலத்தை வரையறுத்து தற்காலிக ஏற்பாடாக கொண்டு வந்த பயங்கரவாத தடைச்சட்டம் இன்றளவில் நடைமுறையில் உள்ளது. ஜனநாயக நாட்டை பயங்கரவாத சட்டம் 50 ஆண்டு காலமாக ஆள்வது என்றால் அதன் விளைவுகளை சிந்தித்துப்பாருங்கள்.

அப்பாவி தமிழ்,முஸ்லிம் மக்களையும் ஏனையவர்களையும்குற்றவாளிகளாக்கும் சட்டமாகவே பயங்கரவாத தடைச் சட்டம் காணப்படுகிறது. கடத்தல், காணாமலாக்குதல், புதைகுழிகளில் புதைத்தல்போன்றகொடூரசெயல்களுக்கு இந்த பயங்கரவாத தடைச்சட்டம் உதவியுள்ளது. இந்த சட்டத்தால் கைது செய்யப்பட்டவர்களுக்கு கொடூர சித்திரவதைகள் வழங்கப்பட்டுள்ளன. தலைகீழாக தொங்கவிடப்பட்டு, செத்தல் மிளகாயை நெருப்பில் போட்டு வெளிவரும் புகையை சுவாசிக்க செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக குட்டிமணி, ஜெகன், தங்கதுரை மற்றும் நடேசன் ஆகியோர் நீதிமன்றத்துக்கு குறிப்பிட்டுள்ளார்கள்.

கொடூர சித்திரவதைகள் ஊடாக பெற்றுக்கொண்ட ஒப்புதல்வாக்குமூலம் ஊடாக பலருக்கு இறப்பு தண்டனை விதிக்கப்பட்டுள்ளன. அப்பாவி .இளைஞர்கள் இறப்பு தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்ந்தவர்கள் என்ற அடிப்படையில் பல சித்திரவதைகள் அங்கு இடம்பெற்றுள்ளன. இவற்றுக்கு சாட்சியங்களாக பலர் இன்றும் வாழ்கிறார்கள்.

பயங்கரவாத தடைச்சட்டம் நிபந்தனையற்ற வகையில் நீக்கப்பட வேண்டும். இந்த சட்டம் இலங்கை அரசுக்கு கேவலத்தை, அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது. இது ஜனநாயக நாடா என்று கேள்வியெழுப்படுகிறது. இளைஞர்கள் ஆயுதமேந்துவதற்கு இந்த சட்டம் தூண்டியுள்ளது. அத்துடன் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாட பயங்கரவாத தடைச்சட்டம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

ஆளும்தரப்பின் பிரதான மூன்று உறுப்பினர்கள் கடந்த காலங்களில் எதிர்க்கட்சியாக இருக்கும் போது பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று எம்முடன் இணைந்து குரல் கொடுத்தார்கள். பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி அதற்கு பதிலாக கொண்டு வரும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் பயங்கரமானது என்றும் குறிப்பிட்டார்கள்.

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரிலான சட்டங்கள் இந்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பயங்கரமானது என்றே குறிப்பிட வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் இலங்கை குடியாட்சி நாடா எ ன்று கேள்வியெழுப்பப்படும். பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கினோம் என்ற பெருமையை பெற்றுக்கொள்ளுங்கள்.

ஊடக அடக்குமுறை பற்றி குறிப்பிட வேண்டும்.கடந்த காலங்களில் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். ஐயாதுரை நடேசன் என்ற ஊடகவியலாளர் பட்டப்பகலில் கொலை செய்யப்பட்டார். முறையான விசாரணைகளை மேற்கொண்டால் பல விடயங்கள் வெளிவரும். சிவராம், சுகிர்தராஜன் ஆகியோர் விவகாரம் குறித்தும் முறையாக ஆராய வேண்டும் என்றார்.

# காணிப் பிரச்சினைக்கு என்ன தீர்வு?

## நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பி. கேள்வி

காணிப் பிரச்சினைக்கு என்ன தீர்வை ஆளும்தரப்பு வழங்கியுள்ளது. பலாலி மற்றும் மயிலிட்டி .இராணுவ முகாமுக்குள் இருந்த இரண்டு கத்தோலிக்க தேவாலயங்கள் உடைக்கப்பட்டுள்ளன. மயிட்டி காணிக்கை மாதா தேவாலயம் ,பலாலி புனித செபஸ்டியன் தேவாலயம் உடைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அப்பகுதியில் பிள்ளையார் கோவில் உடைக்கப்பட்டுள்ளது. காணி விடுவிப்புக்கான கோரிக்கை தொடர்ச்சியாக முன்வைக்கப்படுன்ற நிலையில் யாழ். தையிட்டி பகுதியில் தனியார் காணியில் போராட்டத்துக்கு மத்தியில் விகாரை ஒன்று கட்டப்பட்டுள்ளது. நீதி எங்கு செயற்படுத்தப்படுகிறது. எம்மை இனவாதிகள் என்று விமர்சித்துக் கொண்டு தொடர்ந்து ஆட்சியில் இருக்க முயற்சிக்காதீர்கள் எம் மக்கள் உண்மையை தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள் என இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க உரையாற்றுகையில் இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையின் விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தார். ஆளும்தரப்பு குறிப்பிடுவதை ஏற்காவிடின் ஆணையாளரின் அறிக்கையை பாருங்கள் என்று குறிப்பிட்டார். ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையை சபை முதல்வர் திரிபுப்படுத்தி சபையில் விடயங்களை முன்வைத்தார் .

பொய்யை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்படும் ஆளும்தரப்பு இவ்வாறு திரிபுப்படுத்தி பேசுவது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல. ஆணையாளரின் அறிக்கையில் 2 மற்றும் 3 ஆம் பக்கத்தில் ' ஆளும்தரப்பு பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாகவும், அதற்கு மாற்றீடாக பிறிதொரு சட்டத்தை கொண்டு வரபோவதில்லை என்றும் குறிப்பிட்டிருந்தது.இருப்பினும் பயங்கரவாத தடைச்சட்டம் தற்போதும் பயன்பாட்டில் உள்ளது. அத்துடன் மாற்றீடு சட்டத்துக்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சபை முதல்வர் இதனை பார்க்கவில்லையா,

பெருந்தோட்ட பகுதிகளில் ஏழ்மை தீவிரமடைந்துள்ளது. மலையக மக்களுக்கு 2138 ரூபாய் சம்பளம் வழங்குவதாக தேசிய மக்கள் சக்தி வாக்குறுதியளித்தது. கடந்த ஆளும்தரப்பு 1350 ரூபாய் சம்பளம் தொடர்பான தீர்மானத்தை கொண்டு வந்த போது தேசிய மக்கள் சக்தியின் 3 உறுப்பினர்களும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். இன்று 2000 ரூபாய் பற்றி எவ்வித முன்னேற்றமும் இல்லை. ஆகவே பெருந்தோட்ட மக்கள் பற்றி ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிட்ட விடயங்களை பாருங்கள். சபை முதல்வர் குறிப்பிடுவதை போன்று ஆணையாளரின் அறிக்கையில் பயங்கரவாத தடைச்சட்டம், பெருந்தோட்ட மக்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறை பற்றி ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழன் பத்திரிகையின் ஆசிரியர் சிவராஜாவின் தாயாருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. பத்திரிகை ஆசிரியர் சிவராஜா கொழும்பில் உள்ளார்.ஊரில் உள்ள அவரது தாயாரிடம் ' உங்களின் மகனின் பேஸ்புக் பக்கத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.அவரை கவனமாக இருக்க சொல்லுங்கள்' என்று அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அத்தடன் ஊடகவியலாளர் குமணன் டி.ஐ.டி யால் விசாரிக்கப்பட்டுள்ளார். விசாரணையின் போது கேட்கப்பட்ட விடயங்களை வெளியில் சொல்ல வேண்டாம் அவ்வாறு சொன்னால் பார்த்துக் கொள்கிறோம்' என்று குமணனுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தமக்கு ஆதரவளித்துள்ளார்கள் என்று சபை முதல்வர் குறிப்பிடுகிறார். மக்களாணை பொதுத்தேர்தலுடன் முடிவடைந்து விட்டது. உள்ளுராட்சிமன்றத் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கில் தோல்வியடைந்துள்ளீர்கள்.டக்ளஸ் தேவானந்தாவுடன் ஒன்றிணைந்து நாங்கள் எந்த அதிகார சபைகளிலும் ஆட்சியமைக்கவில்லை. ஆனால் நீங்கள் பிள்ளையானுடன் ஒன்றிணைந்து மட்டக்களப்பில் ஆட்சியமைத்துள்ளீர்கள். வெட்கம் என்பதொன்று இல்லையா உங்களுக்கு. பிள்ளையானுடன் ஒன்றிணைந்து வாகரை பிரதேச சபையில் ஆட்சியமைத்துள்ள கட்சி நீங்கள் வெட்கமடையுங்கள்.

எதிர்கட்சிகளின் உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, ஜீவன் தொண்டமான், ரிசாட் பதியூதீன் ஆகியோரை விமர்சித்தீர்கள் ஆனால் அவர்களுடன் ஒன்றிணைந்து ஆட்சியமைத்துள்ளீர்கள். வெட்கம் என்பது இல்லையா. தேசிய உரிமையை கோரும் எம்மை இனவாதிகள் என்று விமர்சிக்கும் நீங்கள் தான் உண்மையான இனவாதிகள். ஆகவே கண்ணாடி அறையில் இருந்துக் கொண்டு கல்லெறியாதீர்கள்.

காணி பிரச்சினைக்கு என்ன தீர்வு வழங்கியுள்ளீர்கள். பலாலி மற்றும் மயிலிட்டி .இராணுவ முகாமுக்குள் இருந்த இரண்டு கத்தோலிக்க தேவாலயங்கள் உடைக்கப்பட்டுள்ளன. மயிட்டி காணிக்கைமாதா தேவாலயம் , பலாலி புனித செபஸ்டியன் தேவாலயம் உடைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அப்பகுதியில் பிள்ளையார் கோவில் உடைக்கப்பட்டுள்ளது. காணி விடுவிப்புக்கான கோரிக்கை தொடர்ச்சியாக முன்வைக்கப்படுன்ற நிலையில் யாழ். தையிட்டி பகுதியில் தனியார் காணியில் போராட்டத்துக்கு மத்தியில் விகாரை ஒன்று கட்டப்பட்டுள்ளது. நீதி எங்கு செயற்படுத்தப்படுகிறது. எம்மை இனவாதிகள் என்று விமர்சித்துக் கொண்டு தொடர்ந்து ஆட்சியில் இருக்க முயற்சிக்காதீர்கள் எம் மக்கள் உண்மையை தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழர்களுக்கு பிரச்சினைகள் உள்ளன வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்

## அமைச்சர் ஹர்ஸன தெரிவிப்பு

தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் பல பிரச்சினைகள் உள்ளன என்பதை ஏற்கிறோம். தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஊடாக தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.ஐக்கிய நாடுகள் சபை எங்களின் சர்வதேச நண்பன். அதன் உதவிகள் எங்களுக்கு எப்போதும் தேவையானது .என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள ஆளும்தரப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு செவிமெடுப்பதில்லை என்பது தவறான கருத்தாகும். தேசிய மக்கள் சக்தி அவ்வாறு நடந்துகொள்வதில்லை. நாங்கள் இனங்கள், பாலினங்கள் என எது தொடர்பிலும் பார்ப்பதில்லை. சகலர் தொடர்பிலும் அவதானம் செலுத்துகின்றோம். வடக்கு மக்கள் தொடர்பிலும் முக்கியத்துவம் கொடுக்கின்றோம். ஆனால் வடக்கு அரசியல் வாதிகள் அச்சமடைவது ஏன் என்று தெரியவில்லை.

. வடக்கு, கிழக்கு தென் பகுதி மக்களின் சகல பிரச்சினைகளையும் உடனே எங்களால் தீர்க்க முடியாது. ஆனால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றோம். எங்களை தூற்றக்கூடாது. எங்களுக்கு நான்கு வருடங்கள் உள்ளன. நாங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்.

மனிதர்களின் மனங்களிலேயே போர் ஆரம்பிக்கின்றது. மனிதர்களின் மனப்பான்மையிலேயே முறுகல்கள் ஏற்படுகின்றன. இதனால் சமாதானமும் அந்த மக்களின் மனங்களில் இருந்தே வர வேண்டும். மீண்டும் நாடு பாதாளத்திற்குள் தள்ளப்படக்கூடாது. நாங்கள் சில முன்னேற்றங்களை கண்டுள்ளோம்.

பயங்கரவாத தடுப்புக்சட்டம் தொடர்பில் ஆளும்தரப்பு எதுவும் செய்யவில்லை என்று கூறுகின்றனர். ஆனால் கடந்த பெப்ரவரி மாதம் அரசுத் தலைவர் சட்டத்தரணி ஹர்ச குலரத்ன தலைமையில் குழு நியமிக்கப்பட்டது. அதன் இறுதி வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். சர்வதேச ரீதியில் பயங்கரவாத வரைவிலக்கணத்துடன் உள்ளடங்கலாக அதனை மாற்றியமைக்கவுள்ளோம்.

இதேவேளை நீண்டகால சிறைக்கைதிகள் உள்ளனர். இதுவொரு பிரச்சினை என்று தெரியும். இதனால் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக சிறையில் வாழ்பவர்கள் தொடர்பில் இந்த குழு ஆராயும். இது தொடர்பான அறிக்கையை அமைச்சரவையில் சமர்பிக்கவுள்ளோம்.

எவ்வாறாயினும் இனவாத அரசியலை நாங்கள் வெறுக்கின்றோம். எந்தசமூகத்திற்கும்பாதிப்பில்லாதவாறே எந்தவித திருத்தங்களையும் மேற்கொள்கின்றோம். அடுத்த வருடங்களில் குறிப்பிட்ட மாற்றங்களை காணலாம்.

இதேவேளை நல்லிணக்கம் உள்ளிட்ட விடயங்களில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கரிசனைகளை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். முன்னை அரசாங்கங்கள் அதனை செய்யாமல் விட்டுச் சென்றுள்ளன. நாங்கள் அதனை நிறைவேற்றுவோம்.

ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை தொடர்பில் சிலர் விமர்சனங்களை செய்கின்றனர். ஆனால் இது நீதித்துறையின் சுதந்திரத்தையே காட்டுகின்றது. நீதித்துறையில் நாங்கள் தலையிடுவதில்லை. சட்டம் அதனை செய்யும். இதில் சமூக அந்தஸ்து தொடர்பில் எதுவும் கருத்தில்கொள்ளப்படுவதில்லை. நடுநிலையாக சுதந்திரமாக நீதித்துறை செயற்படும்.

ஐ.நா எங்களின் சர்வதே நண்பனே. அதன் உதவிகள் எங்களுக்கு தேவை. அதன்படி செயற்படுவோம். பல தசாப்தங்களாக தீர்க்கப்படாத பிரச்சினைகள் உள்ளன. அது தொடர்பில் உரிய பங்களிப்பை வழங்கும் என்று நினைக்கின்றோம். அத்துடன் ஐநாவுக்கு மட்டுமன்றி மக்களுக்கு எது சரியோ அதனையே நாங்கள் செய்வோம்.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு பாரிய பிரச்சினைகள் உள்ளன என்பதை நாங்கள் மறுக்கவில்லை.தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களுக்கு வழங்கிய சகல வாக்குறுதிகளையும் நாங்கள் பதவி காலத்துக்குள் நிறைவேற்றுவோம் என்றார்.

# என்பிபி ஆட்சியின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு வடக்கிலிருந்தே அபிவிருத்தி கருத்திட்டத் தொடக்கம்

## சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க அறிவிப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் அதிகளவில் வாக்களித்து தேசியமக்கள்சக்தியையேதெரிவுசெய்துள்ளனர். அந்தமக்களின் ஆணையை ஏன் நாங்கள் இல்லாமல் செய்ய வேண்டும். ஏன் அதனை பங்கிட வேண்டும்.வடக்கின் அபிவிருத்திக்காக நிதியை ஒதுக்கியுள்ளோம். நல்லிணக்கமும், அபிவிருத்தியும் நாணங்களின் இரு பக்கங்களை போன்றது. அதன்படி செயற்படுவோம். ஒரு வருடத்துக்கான பூர்த்தியை முன்னிட்டு அரசுத்தலைவர் வடக்கில் இருந்தே அபிவிருத்தி கருத்திட்டத்தை ஆரம்பிப்பார் என சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது வடக்குகிழக்குமற்றும்மலையகம்வாழ்தமிழ்மக்கள்எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்குமேற்கொண்டவிஜயம்தொடர்பில்அவர்வெளியிட்ட அறிக்கையில்ஆளும்தரப்பின்செயற்பாடுகளின்முன்னேற்றங்கள் தொடர்பில் குறிப்பிட்டுள்ளார். நல்லிணக்கம் தொடர்பான பல்வேறு மாற்றங்கள் தொடர்பில் அவர் குறிப்பிட்டுள்ளார். அதனைஏன்வடக்கில்உள்ளஅரசியல்வாதிகள்காணவில்லை. குறைந்தது மனித உரிமைகள் ஆணையாளர் காணும் முன்னேற்றத்தையாவது காணுங்கள். வடக்கு மற்றும் கிழக்கில் இறந்த உறவினர்களை நினைவு கூரும் உரிமையை வழங்கியுள்ளோம். இதனை மாற்றமாக பார்க்கவில்லை. அத்துடன் 20 வருடங்களுக்குமுன்னர்ஊடகவியலாளர்கள்கொல்லப்பட்டமை தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அது மாற்றமில்லையா? இவர்கள் போர்த்தை விடவும் சமாதானம், நல்லிணக்கதிற்கு பயப்படுகின்றனர்.

மிகத் தெளிவான அரசியல் இன்னும் இருக்கும் நாட்டில் ஒருபக்கத்தை போன்று மறுபக்கமும் உருவாகும். வடக்கில் பந்தை உயர்த்தும் போது தெற்கில் டேஸ் அடிக்கும் தரப்பினர் இருக்கின்றனர். அவ்வாறான நிலைமையிலேயே நாங்கள் ஆட்சியில்உள்ளோம். நம்பிக்கையைகட்டியெழுப்பவேண்டும். நாங்கள் ஆளும்தரப்பு என்ற ரீதியில் தமிழ்,முஸ்லிம், சிங்களம் உள்ளிட்ட அனைத்து இனங்களையும் உள்ளடக்கிய ஆளும்தரப்பையே எதிர்பார்க்கின்றோம். ஆகவே நீங்களும் மாறுங்கள்.

பிரேரணையை கொண்டு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் உரையை ஆரம்பிக்கும் போதே இலங்கையில் சிங்களம் மற்றும் தமிழ் என்ற இனங்கள் இருக்கின்றன என்றே கூறினார். அதுவே நடக்கின்றது. நாங்கள் இலங்கையர் என்பது தொடர்பில் கதைக்கின்றோம். அதனை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். இலங்கையில் முஸ்லிம்கள் ஆயிரம் ஆண்டு வரலாற்றை கொண்டவர்கள். இதனை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால் எப்படி ஒன்றாக இருக்க வேண்டும். நல்லிணக்கம் ஆளும்தரப்பிடம் மட்டுமா இருக்க வேண்டும். தாம் சகல இனங்கள் தொடர்பிலும் சிந்திப்பதுடன்,அபிவிருத்தியையும் நல்லிணக்கத்தையும் ஒன்றாகவே கொண்டு செல்வோம். ஒருபுறம் நல்லிணக்கம் மற்றும்ஜக்கியம்மறுபக்கத்தில்அபிவிருத்தி இருக்க வேண்டும்.

ஆளும்தரப்பு பொறுப்பேற்று ஒரு வருடங்கள் பூர்த்தியாகும் மாதம் வருகின்ற செப்டம்பரில் ஆரம்பமாகவுள்ளது. அதன் முதலாவது வேலைத்திட்டத்தை அரசுத் தலைவர் யாழ்ப்பாணத்திலேயேஆரம்பிக்கவுள்ளளார். செப்டம்பர்முதலாம் திகதி யாழ்ப்பாணத்திலும் இரண்டாம் திகதி முல்லைத்தீவிலும் நந்திக்கடலில் வட்டுவாகல் பாலம் அமைக்கப்படவுள்ளது. பின்னர் பளையில் விதை பண்ணைக்கான அடிக்கல் நாட்டவுள்ளார்.வடக்கில் அதிகளவில் வாக்களித்து தேசிய மக்கள் சக்தியையே தெரிவு செய்துள்ளனர். அந்த மக்களின் ஆணையை ஏன் நாங்கள் இல்லாமல் செய்ய வேண்டும். ஏன் அதனை பங்கிட வேண்டும். நாங்கள் அதிகளவில் வடக்கின் அபிவிருத்திக்காக நிதியை ஒதுக்கியுள்ளோம். இதன்படி நல்லிணக்கமும், அபிவிருத்தியும் நாணங்களின் இரு பக்கங்களை போன்றது. அதன்படி செயற்படுவோம்.

இப்போது இனவாத அரசியலுக்கு உணவு தேவையாக உள்ளது.இனவாதிகள் கடும் பசியில் இருக்கின்றனர். இந்த பசியில் அரசியல் செய்ய முடியாத என்றாகியுள்ளது. தெற்கில் ராஜபக்ஷக்கள் அப்படி நினைத்தார்கள். இப்போது அவர்களுக்கு இனவாத உணவு இல்லாமல் போயுள்ளது. இன்று வடக்கில் முத்தையன்கட்டு சம்பவத்தை அவ்வாறு இனவாதமாக பயன்படுத்த முயன்றனர். சில குறைபாடுகள் நடக்கலாம். அதனை ஆளும்தரப்பின் கொள்கையாக எப்படி இருக்க முடியும். மனித புதைகுழிகள் தொடர்பில் கதைக்கப்படுகின்றன. எங்களின் காலத்திலேயே அது தோண்டப்படுகின்றன. கொழும்பு துறைமுக பகுதியில் மீட்கப்பட்டவை யாருடையவை என்று தெரியவில்லை. அது தொடர்பான விசாரணைகள் எமது ஆளும்தரப்பின் உதவியுடனேயே நடக்கின்றன.

போர்காலத்தைபோன்றுபோர்த்தின்பின்னரானகாலத்திலும் தமிழ் மக்கள் இனவாதங்களுக்கு முகம்கொடுத்தனர். அந்த காலத்திலும் சில அரசியல் கட்சிகள் ஒன்றிணையவில்லை. குறிப்பாக ஈபிடிபியுடன் இணையவில்லை. 2015இல் டக்ளஸ் எதிர்க்கட்சியில்இருக்கும்போதும்அவருடன்இணையாதவர்கள் இப்போதுஅந்தக்கட்சியுடன்இணைகின்றனர். அப்படியென்றால் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ரணில், ராஜபக்ஷக்களை விடவும் மோசமானதா அரசியல் ரீதியில் அழிந்துகொண்டு போகும் சவால்களுக்கு மத்தியில் இதுவரை காலம் தள்ளப்படாத இடங்களுக்கு தள்ளப்பட்டுள்ளனர். நாங்கள் வேண்டுமென்றால் தேசியப் பட்டியல் எம்.பி பதவியை தருகின்றோம். இனவாத தீனியை தேடிப் போக வேண்டாம். மாற்றங்களை பாருங்கள்.

சபை ஒத்திவைப்பு பிரேரணையை கொண்டு வந்து வடக்கு,கிழக்கிலும்மலையகத்திலும்தமிழ்மக்கள்எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கதைக்கின்றீர்கள். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் இங்கே இல்லை. எங்கள் பக்கத்தில் பிரதமர் உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் இங்கு இருக்கின்றோம். நாங்கள் ஏற்றுக்கொண்டு பதில்களை வழங்குகின்றோம். எங்கேஅவர்? அரசுத்தலைவர்த்தேர்தலில்சஜித்துக்கு வாக்களித்தீர்கள் .தயவு செய்து கடந்த காலங்களை விடுத்து நாங்கள் செய்யும் வேலைத்திட்டங்கள் ஊடாக எங்களை மதியுங்கள். முதலில் மாற்றமடையுங்கள். இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துங்கள். நீங்கள் சுட்டிக்காட்டும் குறைபாடுகளை ஏற்றுக்கொண்டு செல்லத் தயார் என்றார்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.08.2025இல் வெளியிடப்பெற்றது